## பா.து.ந.க.எண்.பி2/1230/2012
## முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்08.03.2013 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.151/2013 பொருள் எண்:01

### வயது முதிர்வு ஓய்வு அனுமதி

திரு.ஆர்.சீனிவாசலு, செயற்பொறியாளர், பாலங்கள் துறை அவர்கள் 31.03.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். இவர் வகிக்கும் பதவி மாநகராட்சி பணியாளர் பிரிவில் வகுப்பு–2ன் கீழ் வருவதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

தனியர் இதுவரை பணியாற்றியுள்ள பணித்துறை, பேருந்து சாலைகள் துறை, திடக்கழிவு மேலாண்மைத்துறை, பாலங்கள் துறை, கட்டடத்துறை, மண்டலம்–9 மற்றும் 10 ஆகிய துறைத்தலைவர்களிடமிருந்து தனியர் பணியாற்றிய காலங்களில் தனியர் மீது தணிக்கைத்தடைகள், ஒழுங்கு நடவடிக்கைகள், முன்பண நிலுவை ஆகிய ஏதும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது. இருப்பினும் அன்னாரை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் ஏதும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு அன்னாரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதியப் பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 31.03.2013 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

செயலாளர், சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 05.03.2013 நாளிட்ட கடிதத்தில் தனியர் இக்கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் அல்ல எனவும், தனியர் மீது எவ்வித கடன் நிலுவையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியால் இவருக்கு குடியுருப்பு ஏதும் ஒதுக்கப்படவில்லை. இவருக்கு வருடாந்திர ஊதிய உயர்வு இதுநாள்வரை வழங்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், சென்னை மாநகராட்சி அவர்களின் 25.02.2013 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மீது தணிக்கை தடைகள் மற்றும் நிதி இழப்பீடு எதுவும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு அவரை பொறுப்பாக்கி அவற்றை அன்னாரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யும் நிபந்தனைகளுக்கு உட்படுத்தியும் அன்னாரை 31.03.2013 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கலாம்.

எனவே, திரு.ஆர்.சீனிவாசலு, செயற்பொறியாளர், பாலங்கள் துறை (பணியிடம் பேருந்து சாலைகள் துறை) அவர்கள் மீது தணிக்கை தடைகள் மற்றும் நிதி இழப்பீடு எதுவும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு அவரை பொறுப்பாக்கி அவற்றை அன்னாரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி 31.03.2013 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“2013–14ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந(ம)ம.கு.ந.க.எண்.எப்.4/001/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.152/2013 பொருள் எண்:02

**தன்விருப்ப ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும், டாக்டர்.நந்தினிகமலகண்ணன் அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும், உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், தொடர்ந்து பணியாற்ற இயலாததால் தனக்கு தன்விருப்ப ஓய்வு வழங்க கேட்டுக்கொண்டு 90 நாட்கள் முன்னறிவிப்புடன் நியமனக்குழுவிற்கு 31.12.2012 அன்று மனு அளித்துள்ளார்.

டாக்டர்.நந்தினிகமலகண்ணன் அவர்கள் மாவட்ட குடும்ப நலத்துறையில் 22.05.1986 அன்று மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியாற்றி வருகிறார். தனியருக்கு இப்பதவியில் பணிவரன்முறைப்படுத்தி தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

விழிப்பு அலுவலர் அவர்களின் 28.01.2013 நாளிட்ட கடிதத்தில் இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர்மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை கண்காணிப்பாளர் குற்ற புலனாய்வு துறை அவர்களின் 04.02.2013 நாளிட்ட கடிதம் மற்றும் இயக்குநர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 21.02.2013 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி செயலாளர், கூட்டுறவு சங்கம் அவர்களின் 12.02.2013 நாளிட்ட கடிதத்தில் நிலுவை தொகை ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த வடபழனி மண்டலம், சைதாப்பேட்டை மண்டலம் மற்றும் டாக்டர்.ஆர்.கே.நகர் மண்டலத்தை சார்ந்த மண்டல அலுவலர் அவர்களின் 28.01.2013 நாளிட்ட குறிப்பில் தனியர் பணிபுரிந்த காலத்தில், சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை தணிக்கை தடை ஏதுமில்லை என்றும் சென்னை மாநகராட்சியில் வீடு எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும் தனியர்மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன்விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாள் அன்று 54 வயது பூர்த்தி செய்துள்ளார். மேலும் 23 ஆண்டுகள் 11 மாதங்கள் 23 நாட்கள் தகுதியுள்ள பணிக்காலம் பூர்த்தி செய்துள்ளார். தனியர் சம்பளமில்லா விடுப்பு 2 வருடம் 10 மாதம் 15 நாட்கள் துய்த்துள்ளார்.

தனியர் தன் விருப்ப ஓய்வு கோரி 31.12.2012 தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளதால் விண்ணப்பம் அளித்த நாளிலிருந்து 90 நாட்கள் முடிவடையும் நாளான 30.03.2013 அன்று முதல் தனியரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி அளிக்கப்பட வேண்டும். தனியர் வகுப்பு–2ஐ சார்ந்தவர் என்பதால் இவரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனவே, டாக்டர்.நங்கினி கமலகண்ணன், மருத்துவ அலுவலர் , மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை , நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை இவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 30.03.2013 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"2013–14ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.இ1/1942/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.153/2013 பொருள் எண்:03

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் திரு.P.உதயசங்கர் பாபு, செயற்பொறியாளர் கட்டடத்துறை (அயற்பணியில் சென்னை பெருநகர ரெயில் நிறுவனம்) அவர்கள் மீது 29.06.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு பின்னர் 30.06.2012 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றியும் தணிக்கைத்தடை மற்றும் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அதனை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும் 30.06.2012 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்படவேண்டும்.

திரு.P. உதயசங்கர் பாபு, செயற்பொறியாளர் அவர்கள் முதன்முதலில் 24.03.1975 முதல் ஓவர்சீயராக பணியில் சேர்ந்து பின்னர் பதவி உயர்வில் இளநிலை பொறியாளராக 22.05.1979லும், பின்னர் உதவி பொறியாளராக பதவி மாற்றத்தில் 02.06.1990லும், பதவி உயர்வில் உதவி செயற்பொறியாளராக 28.02.2000லும், செயற்பொறியாளர் பதவி உயர்வில் 03.04.2012 முதல் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்.

தனியருக்கு ஓவர்சீர் பதவியில் தகுதிகாண் பருவம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியருக்கு அனைத்து பதவிகளிலும் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் 37 ஆண்டுகளாக தொடர்ந்து பணியாற்றியுள்ளார். சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய அனைத்து மண்டலம் மற்றும் துறைகளுக்கு தணிக்கைத்தடை முன்பணநிலுவைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரப்பட்டதில் தணிக்கைதடைகள், முன்பணநிலுவைகள் ஏதும் இல்லை என்று இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

பேருந்து சாலைகள் துறையின் 13.02.2013 நாளிட்ட அறிக்கையில் தனியர் மீது தனியரை தனி பொறுப்பாக்கி தணிக்கைதடை ஏதும் நிலுவையில் இல்லை என்றும், நேர்செய்யப்படாத முன்பண நிலுவை இல்லை என்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்றும் தெரிவித்து, தணிக்கைதடைகளோ அல்லது முன்பணம் நேர்செய்யப்படாமல் இருப்பதோ பின்னர் தெரியவரின் அதற்கு தனியரே முழு பொறுப்பாவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயற்பணியில் சென்னை பெருநகர ரெயில் நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்திற்குரிய தணிக்கைத்தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவகைள் ஏதும் இல்லை என சென்னை பெருநகர ரெயில் நிறுவன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வீடு கட்டும் முன்பணமோ, வாகன முன்பணமோ, சென்னை மாநகராட்சியிலிருந்து பெறவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் உறுப்பினர் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

எனவே, திரு.P. உதயசங்கர் பாபு, செயற்பொறியாளர் கட்டடத்துறை (அயற்பணியில் சென்னை பெருநகர ரெயில் நிறுவனம்) அவர்கள் மீது கோப்பு எண். பொ.து.ந.க.எண். ஈ1/23870/12ன்படி தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி 30.06.2012 நாளிட்ட செயல்முறை ஆணையில் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றியும் தணிக்கைத்தடை மற்றும் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அதனை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும் 30.06.2012 பிற்பகல் முதல் தனியரை ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்கழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“2013–14ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**சு.து.ந.க.எண்.சி1/912/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.154/2013 பொருள் எண்:04

**வேலூர் மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் அனுமதி**

வேலூர் மாநகராட்சி, பொது சுகாதாரம், சித்தா மருந்தகத்தில் பணிபுரியும் சித்தா மருத்துவ அலுவலர் டாக்டர்.ஆர்.சியாமளா என்பவர் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிடமாறுதல் கோரிய கோரிக்கையை தொடர்ந்து வேலூர் மாநகராட்சி மன்றத்தீர்மான எண்.82/2013, நாள்.06.02.2013ன் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்படி மருத்துவ அலுவலரின் சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிடமாறுதல் கோரும் கோரிக்கையை பரிசீலிக்குமாறு வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் 08.02.2013 நாளிட்ட கடிதம் வாயிலாக சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் கீழ் மூன்று சித்தா மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இதில் மண்டலம்–13ல் இயங்கிவரும் சித்தா மருந்தகத்தில் பணிபுரியும் சித்தா மருத்துவ அலுவலரான டாக்டர்.மோ.மல்லிகா அவர்கள் வருகின்ற 31.03.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற உள்ளார். இதனால் ஒரு சித்தா மருத்துவ அலுவலர் காலிப்பணியிடம் ஏற்படவுள்ளது.

டாக்டர்.ஆர். சியாமளா, சித்தா மருத்துவ அலுவலர், வேலூர் மாநகராட்சி, அவர்களை ஒரு வழி பணியிட மாறுதலில் சென்னை மாநகராட்சிக்கு செல்ல வேலூர் மாநகராட்சி மன்றம் இசைவு அளித்துள்ளதால் இவரை ஒரு வழி பணியிட மாறுதலில் சென்னை மாநகராட்சிக்கு ஈர்த்துக்கொள்ள மன்றத்தின் அனுமதியினை நியமனக்குழு மூலமாக பெறப்பட வேண்டும். மேலும் இவரை சென்னை மாநகராட்சியில் ஈர்த்துக்கொள்வதால் அதிகபடியான நிதி இழப்பீடு ஏதும் ஏற்படாது. தனியரை சென்னை மாநகராட்சியில் ஒரு வழி பணியிடமாறுதல் செய்து கொள்ளும் நிலையில் இவர் சென்னை மாநகராட்சி பணியில் இளையவராக கருதப்படுவார். இவர் வேலூர் மாநகராட்சியில் பணிபுரிந்த காலத்திற்கான ஓய்வூதிய பங்களிப்பு (Pension contribution) தொகையினை வேலூர் மாநகராட்சியில் சம்மந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் பணிக்கால அளவின்படி கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு செலுத்தும் நிலையில் வேலூர் மாநகராட்சியில் பணிபுரிந்த காலத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

டாக்டர்.ஆர்.சியாமளா, சித்தா மருத்துவ அலுவலர், வேலூர் மாநகராட்சி அவர்களை ஒரு வழி பணியிட மாறுதலில் இவரை சென்னை மாநகராட்சியில் பணி மாறுதல் செய்து கொள்ளும் நிலையில் இவர் சென்னை மாநகராட்சி பணியில் இளையவராக கருதப்படுவார் என்ற நிபந்தனைக்குட்பட்டும், இவர் வேலூர் மாநகராட்சியில் பணிபுரிந்த காலத்திற்கான ஓய்வூதிய பங்களிப்பு (Pension contribution) தொகையை வேலூர் மாநகராட்சியில் இவர் பணிபுரிந்த பணிக்கால அளவின்படி கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு செலுத்தும் நிலையில் வேலூர் மாநகராட்சியில் பணிபுரிந்த காலத்தை ஓய்வூதியத்திற்கு கணக்கில் கொள்ளப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும். டாக்டர்.ஆர்.சியாமளா, சித்தா மருத்துவ அலுவலர் , வேலூர் மாநகராட்சி அவர்களை டாக்டர்.மோ.மல்லிகா, மருத்துவ அலுவலர் (சித்தா) சென்னை மாநகராட்சி என்பவர் 31.03.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல உள்ளதால் ஏற்படவுள்ள காலிப்பணியிடத்தில் இவரை ஒரு வழி பணியிட மாறுதலில் ஈர்த்துக்கொள்வதற்கும் அரசின் அனுமதி ஆணை பெற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பிடவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“2013–14ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/ 215/2013.**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.155/2013 பொருள் எண்:05

**மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியல்**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 1.3.2013–ஐ மைய நாளாகக் கொண்டு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் |
| 2. | மைய நாள் | 01.03.2013 |
| 3. | ஊதிய விகிதம் | ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.6,600/– |
| 4. | காலிப்பணியிட மதிப்பீடு 1<br>Estimate Vacancies. | அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 02<br>அ) தற்காலிக பணியிடம் – 0<br>ஆ) நிரந்தர பணியிடம் – 02<br>2. பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் / தன்விருப்ப ஓய்வில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடம் – 00<br>3. மைய நாளன்று உள்ள காலிப் பணியிடம் – 01<br>4. 5% விடுப்பு காலிப்பணியிடம் – 0<br>5. பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 00<br>6. பட்டியல் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள் – 00<br>-----<br>மொத்தம் – 01<br>----- |
| 5. | வளர்நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | அ) மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலராக இரண்டு வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி இருக்க வேண்டும்.<br>ஆ) தமிழ்நாடு அரசு தேர்வாணயம் நடத்தும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி. |
| 6. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப் பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. |

மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியினை வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி பதவி உயர்வு மூலம் நிரப்ப வளர்நிலை பதவியில் உள்ள மூத்த மண்டல அலுவலர்களின் பெயர்கள் பணிமூப்பின்படி பின்வருமாறு.

| வ. எண். | மண்டல அலுவலர்களின் பெயர் | பணிபுரியும் மண்டலம் | மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்ற நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | டாக்டர்.திருமதி பி. கலைச்செல்வி, | புளியந்தோப்பு மண்டலம் | **21..01.2008** | இவர் மாவட்ட குடும்பநல மருத்துவ அலுவலர் பதவி உயர்வுக்கு தெரிவுப்பட்டியல் **1.3.2011–ஐ** மைய நாளாகக் கொண்டு தயாரிக்கும்போது, தனது குடும்ப சூழ்நிலை காரணமாக, தற்காலிகமாக பதவி உயர்வு வேண்டாம் என்று கடிதம் அளித்திருந்ததால் தனியருக்குஇவ்வலுவலக செயல்முறை ஆணை மா.கு.ந.(ம)ம.கு.ந.எண். எப்4/671/11, நாள்.3.7.12ல் 3 ஆண்டுகள் பதவி உயர்வு நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் தனியரது பெயரை தெரிவுப் பட்டியலில் சேர்க்கும் நிலை எழாது. |
| 2. | டாக்டர். திருமதி. ப. தரணி, | பெருமாள்பேட்டை மண்டலம் | 29.01.2010. | இவர் மீது துறை சம்பந்தமான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதாலும் இவரின் பணி திருப்திகரமாக உள்ளது என மந்தன அறிக்கை கடந்த **5** ஆண்டுகளுக்கு பெறப்பட்டுள்ளதாலும் இவரது பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

மேற்படி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுலுலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1B–யின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவிக்கான நிரப்பும் அதிகார பங்களிப்பு சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவிக்கான பின்வரும் தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

| வ.எண். | மண்டல அலுவலர் பெயர் |
|---|---|
| 1. | டாக்டர்.திருமதி.ப. தரணி |

மேற்படி, தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபரைக் கொண்டு **1.3.2013** மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தில் தேர்ந்த பட்டியலிலிருந்து ரூ.**15600–39100** + தர ஊதியம் ரூ.**6600** என்ற ஊதிய விகிதத்தில், மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு வழங்கிட மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"**2013–14**ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.க.எண்.எப்4/2712/2012**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.02.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.156/2013 பொருள் எண்:06

**மருத்துவ அலுவலர் நியமனம்**

எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் உட்பட சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலர் ( Medical Officer) பதவியில் உள்ள 15 காலிப்பணியிடங்களை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட மருத்துவ பட்டம் (M.B.B.S) மகப்பேறு படிப்பில் பட்டயத்திற்கு (D.G.O) முன்னுரிமை அடிப்படையில் மருத்துவ அலுவலர்களை இன சுழற்சியின் அடிப்படையில் நேரடி நியமனம் செய்ய உத்தேசிக்கப்பட்டு மூப்பின் அடிப்படையில் தகுதி வாய்ந்த 75 மருத்துவ அலுவலர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, மருத்துவ அலுவலர்களில் பணி விதிகளில் மருத்துவ அலுவலர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்ய கீழ்கண்டுள்ளவாறு கல்வித்தகுதியின் அடிப்படையில் M.B.B.S பட்டப்படிப்பு பயின்ற நபர்களை கொண்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| NAME OF THE PART | METHOD RECRUITMENT | QUALIFICATION |
|---|---|---|
| MEDICAL OFFICER | DIRECT | M.B.B.S degree preferably with a post graduate degree or diploma in Gynaelology or any other equivalent degree or diploma of any university or Institution recognised by the University Grants Commission. |

மருத்துவ அலுவலர் பதவிக்கு ஊதிய விகிதம் ரூ.15,600 – 39100 + தர ஊதியம் ரூ.5400/– ஆகும். மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 15 மருத்துவ அலுவலர் பெயர் பட்டியல் கோரப்பட்டதில் 1 : 5 என்ற விகிதத்தில் 75 மருத்துவ அலுவலர் பெயர் பட்டியல் பெறப்பட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தால் அனுப்பப்பட்ட 75 நபர்களில் 3 நபர்கள் ஏற்கனவே சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணி புரிவதால் மீதமுள்ள 72 நபர்களுக்கு நேர்காணலுக்கான அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டு நேர்காணலுக்கு 18 பேர்கள் கலந்து கொண்டார்கள்,

1. 06.12.2012 நாளிட்ட ஆணையரின், அனுமதிப்படி 1. துணை ஆணையர் (சு) 2. மாநகர நல அலுவலர் (பொ) 3. துணை திட்ட ஒருங்கிணைப்பாளர், 4. மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் ஆகிய நான்கு உறுப்பினர்களை கொண்ட நேர்காணல் குழு அமைத்து 18 நபர்களுக்கு 21.12.2012 அன்று நேர்காணல் நடத்தப்பட்டு மருத்துவ அலுவலர் பட்டப்படிப்பிற்கு 85 மதிப்பெண்களும் 5 மதிப்பெண்கள் முன் அனுபவத்திற்கும், 10 மதிப்பெண்கள் திறமைக்கும் மொத்தம் 100 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளது.
2. சான்று சரிபார்ப்பு நேர்காணலில் கலந்து கொண்ட 18 நபர்களின் விவரம் பின்வருமாறு

**ஆதிதிராவிடர் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்:**

| வ. எண் | மருத்துவ அலுவலர் பெயர் | வேலை வாய்ப்பு எண் | பிறந்த தேதி | இனம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர்.சி.பிரியா. எண்.2,முதல் தளம் திருவீதியம்மன் கோவில் தெரு, கோயம்பேடு, இராயல்அவின்யூ, சென்னை–10 | CHP 2007 F00020005 Dt 18.06.2007 | 23.9.1980 | எஸ்.சி | |
| 2 | டாக்டர்.ஸ்ரீரஞ்சனி,எண் ,4/சி2 நளினி கோபால் ப்ளாட்ஸ் இந்திராகாந்தி 3வது தெருசூளைமேடு சென்னை–94 | CHP 2008 F00010512 Dt 19.05.2008 | 02.02.1984 | எஸ்.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 3 | டாக்டர்.வி.சங்கீதா எண்.11,5வது குறுக்கு தெரு மார்டன் சிட்டி பட்டாபிராம், செ–72. | CHP 2008 F10657 Dt 20.05.2008 | 18.01.1984 | எஸ்.சி | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | டாக்டர்.ஆர்.கோகிலா எண்.31 ராஜேஸ்வரி நகர், திருவொற்றியூர் சென்னை—19 | CHP 2008 F11479 Dt 29.05.2008 | 28.01.1983 | எஸ்.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 5 | டாக்டர்.எம்.கே.எழிலரசி எண்.52,நாங்கூரன் நகர் நந்திவரம் கூடுவாஞ்சேரி செங்கல்பட்டு தாலுகா காஞ்சிபுரம் | CHP 2008 F00015144Dt 07.07.2008 | 20.08.1984 | எஸ்.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 6 | டாக்டர்.பி.பிரம்மவித்யா எண்.1147/2எ சூரஜ் அப்பார்ட்மெண்ட் வெஸ்ட் எண்டுகாலணி அண்ணா நகர் விரிவாக்கம் சென்னை—50 | CHP 2008 F00015402 Dt 09.07.2008 | 24.09.1985 | எஸ்.சி | |
| 7 | டாக்டர்.பாரதி ஸ்ரீலதா எண்.18/32 2வது லே அவிட் 7வது தெரு மகாலட்சுமி நகர் ஆதம்பாக்கம் சென்னை—88 | CHP 2009 F09257 Dt 21.05.2009 | 26.11.1984 | எஸ்.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 8 | டாக்டர்.எஸ்.நந்தினி எப்2 ஜி.ப்ளாக் லக்ஸ்மாலாய அப்பார்ட்மெண்ட் 4 கிருஷ்ணா ரோடு புதிய பெருங்களத்தூர் சென்னை—63 | CHP 2009 F24244 Dt 30.11.2009 | 18.06.1986 | எஸ்.சி | |

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | டாக்டர். ஜே,மனோன்மணி எண்.23,1வது மெயின் ரோடு நியூ காலணி குரோட்பேட்டை சென்னை—44 | CHP 2005 F03808 Dt 21.03.2005 | 15.11.1980 | பி.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 10 | டாக்டர். எம்.உமாமகேஸ்வரி, எண்.6,அலாபி மண்டபம் தெரு சிந்தாதிரிபேட்டை சென்னை—2 | CHP 2007 F06861 Dt 11.04.2007 | 13.06.1969 | பி.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 11 | டாக்டர்.ஜி.கே.ஆர்.பத்ம பிரியா நவின்ஸ் மேரி லேண்ட் பிளாட் எ.எஸ்.எ/எண் 2/492 மாம்பாக்கம் மெயின் ரோடு மேடவாக்கம் சென்னை—100 | CHP 2007 F019334 Dt 11.06.2007 | 20.02.1984 | பி.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |

**மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | டாக்டர்.வி.கலைவாணி 3,பி.ஒப்லாசா அப்பார்ட்மென்ட் 145 மேடவாக்கம் மெயின் ரோடு ஆதம்பாக்கம் செக்கை–88 | CHP 2005 F00014655D t 31.08.2005 | 12.12.1980 | எம்.பி.சி | |
| 13 | டாக்டர்.எம்.கே.தேவிகா பிரியதர்ஷினி எண்.16/9 வீரபாண்டி நகர் 1வது தெரு சூளைமேடு சென்னை–14 | CHP 2010 F55603 Dt 04.07.2008 | 16.06.1985 | எம்.பி.சி | |
| 14 | டாக்டர்.எல்.மைதிலி எண் 10/297 38 வது தெரு 7 வது செக்மார் கே.கே.நகர் சென்னை–78 | CHP 2009 F00000 978 Dt 23.01.2009 | 20.08.1983 | எம்.பி.சி | |
| 15 | டாக்டர்.வி.விஜயலட்சுமி 19/11 காந்தி தெரு வானும்பேட்டை சென்னை–91 | CHP 2009 F07 264 Dt 02.04.2009 | 15.06.1961 | எம்.பி.சி | உத்திராவாத பத்திரம் அளித்து தனியாரிடம் பணிப்புரிகிறார். மேலும் அசல் சான்றிதழ்கள் அளிக்கவில்லை. |
| 16 | டாக்டர்.வி.அகிலா தேவி எண்.140/75 8வது தெரு செக்ரட்ரியேட் காலணி கீழ்பாக்கம் சென்னை –10 | CHP 2003 F0000 2643 Dt 24.03.2003 | 05.03.1979 | எம்.பி.சி | |

**பொதுப்பிரிவில் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | டாக்டர்.எ.சாகிதாபேகம் எண்.1,மசூதி தெரு கோவில்பாதை, ஆவடி சென்னை–62 | CHP 2012 F0000 2689 Dt 22.11.2006 | 01.12.1977 | (G.T) பி.சி (முஸ்லீம்) | |
| 18 | டாக்டர்.திவ்யா எண்.10/14 அப்பு பிளாட் முகப்பேறு சென்னை–37 | CHP 2007 F19507 Dt 12.06.2007 | 29.02.1983 | (G.T) பி.சி | |

1. வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து இனசுழற்சி அடிப்படையில் கோரிப் பெறப்பட்ட நபர்களின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | இனசுழற்சி | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து கோரப்பட்டது | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது | நேர்காணலில் கலந்து கொண்டவர் கள் | பணி நியமனம் செய்ய தகுதியானவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆதிதிராடவிடர் (முன்னுரிமை) | 2 | 0 | 0 | 0 |
| 2. | ஆதிதிராடவிடர் (முன்னுரிமையற்றவர்) | 3 | 25 | 8 | 3 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர் மரபினர் (முன்னுரிமை) | 0 | 0 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர் மரபினர் (முன்னுரிமையற்றவர்) | 4 | 20 | 3 | 0 |
| 5 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (முன்னுரிமை) | 1 | 0 | 0 | 0 |
| 6 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (முன்னுரிமையற்றவர்) | 2 | 15 | 5 | 2 |
| 7 | பொதுப்பிரிவு (முன்னுரிமை) | 1 | 0 | 0 | 0 |
| 8 | பொதுப்பிரிவு (முன்னுரிமையற்றவர்) | 2 | 10 | 2 | 2 |
| | மொத்தம் | 15 | 75 | 18 | 7 |

1. அரசாணையின் படி இனசுழற்சி பின்பற்றப்பட்டு 2011–ம் ஆண்டு மருத்துவ அலுவலர் பதவிக்கான நேரடி நியமனம் வ.எண்.65ல் முடிவடைவதால் தற்பொழுது வ.எண். 66ல் இனசுழற்சி முறை துவக்கப்பட்டு 7 நபர்கள் கீழ்கண்டுள்ளவாறு மருத்துவ அலுவலர் பதவிக்கு தகுதி பெறுகிறார்கள்.

| வ.எண் | மருத்துவ அலுவலர்களின் பெயர்கள் | வேலை வாய்ப்பு எண் | இனம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| **<u>ஆதிதிராவிடர் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்:</u>** | | | | |
| 1. | டாக்டர். எஸ். நந்தினி | CHP 2009 F24244<br>Dt 30.11.2009 | எஸ்.சி | 70.21 |
| 2. | டாக்டர். பி. பிரம்மாவித்யா | CHP 2008 F00015402<br>Dt 09.07.2008 | எஸ்.சி | 66.41 |
| 3. | டாக்டர். வி. சங்கீதா | CHP 2008 F10657<br>Dt 20.05.2008 | எஸ்.சி | 63.55 |
| **<u>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்:</u>** | | | | |
| 4. | டாக்டர். எம்.தேவிகா ப்ரியதர்ஷினி | CHP 2010 F55603<br>Dt 04.07.2008 | எம்.பி.சி | 71.19 |
| 5. | டாக்டர். எல். மைதிலி | CHP 2009 F00000978<br>Dt 23.01.2009 | எம்.பி.சி | 67.96 |
| **<u>பொதுப்பிரிவில் முன்னுரிமையற்றவர் பெயர் பட்டியல்</u>** | | | | |
| 6. | டாக்டர். திவ்யா | CHP 2007 F19507<br>Dt 12.06.2007 | பொதுப்பிரிவு (பி.சி) | 70.77 |
| 7. | டாக்டா. சாகிதா பேகம் | CHP 2012 F0000 2689<br>Dt 22.11.2006 | பொதுப்பிரிவு (முஸ்லீம்) | 62.55 |

மேற்படி நியமனம் செய்யும் SC( N.P) மற்றும் MBC ( N.P) நபர்களில் எவரேனும் பணியில் சேராத பட்சத்தில் கீழ்கண்ட நபர்களை காத்திருப்போர் பட்டியலில் சேர்த்து பணிநியமனம் செய்யலாம்.

| வ.எண் | மருத்துவ அலுவலர்களின் பெயர்கள் | இனம் | வயது | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1 | டாக்டா. சி. பிரியா | எஸ்.சி (N.P) | 32 | 63.54 |
| 2. | டாக்டர். வி. அகிலாதேவி | எம்.பி.சி. (N.P) | 33 | 63.62 |

எனவே இன சுழற்சி அடிப்படையில் முன்னுரிமை பெற்ற நபர்கள் இல்லாத இனங்கள் பின்னர் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பப்படும். இதர 7 பணியிடங்களுக்கு **15,600– 39,100** + தர ஊதியம் **5400** என்ற ஊதிய விகிதத்தில் மருத்துவ அலுவலர் பதவிக்கு நியமனம் பெற தகுதி பெறுகின்றனர்.

1. எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட 7 நபர்களுக்கு இவர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வு தேர்ச்சி பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனும், தாய்மொழி தமிழ் இல்லையெனில், பணி நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவம் முடிப்பதற்குள் தமிழ்நாடு தேர்வாணையக் குழுவால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடனும், மேலும், துறைத்தலைவர்கள், உரியவரின் அசல் சான்றிதழ்களை சரிபார்த்த பின் இவர்களின் கல்வித்தகுதி, வயது, தமிழ்மொழியில் தேர்ச்சி ஆகியவற்றைப் பற்றி திருப்தியடைந்த பின் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு அட்டைகளை பெற்றுக்கொண்டு, பின் மருத்துவ தகுதி சான்றிதழ் பெற்ற பின்னர் பணியில் சேர அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையுடனும், தவறான தகவல் அளித்து, அதனடிப்படையில் இவர்கள் பணிநியமனம் பெற்றார்கள் என பின்னர் தெரியவரின் இவர்களது நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்பட்டு, உடனடியாக பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையுடனும், சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போழுது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களில் தற்காலிகமாக மருத்துவ அலுவலராக ரூ.**15,600 – 39,100** + (தர ஊதியம் **5400**) காலமுறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன்பணி நியமனம் செய்வதற்கும்,
2. திருமதி. டாக்டர். சி. பிரியா என்பவரை காத்திருப்போர் பட்டியலில் வைத்து எவரேனும் ஆதிதிராவிடர் வகுப்பில் (N.P) பணியில் சேராத பட்சத்தில் இவரது பெயரினை பட்டியலில் சேர்த்து நியமனம் செய்வதற்கும். திருமதி. வி. அகிலாதேவி என்பவரை காத்திருப்போர் பட்டியலில் வைத்து எவரேனும் மிகவும் பிற்ப்படுத்தப்பட்ட வகுப்பில் (N.P) பணியில் சேராத பட்சத்தில் இவரது பெயரினை பட்டியலில் சேர்த்து நியமனம் செய்வதற்கும்,

மேற்கண்ட **1** மற்றும் **2** இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘**2013–14**ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூட்டம் நடைபெறுவதால் இப்பொருளின் அவரசம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றின் மூலம் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.13.ந.க.எண்.சி2/892/2013**

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.02.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.157/2013 பொருள் எண்:07

**மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடம் இடிக்க அனுமதி**

| வ.எண். | வார்டு.174 | மண்டலம்–13 |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மசூதி காலனி 6வது தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1993ம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 62.10 சதுர மீட்டர், தரைதளம் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | சுமார் 130.35 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 58,392/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | உள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடத்தில் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக மீண்டும் அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கு. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார் ? | 174வது மாமன்ற உறுப்பினர் |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் மற்றும் நாள் | 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 422, நாள்–19.12.2012 |

எனவே, மண்டலம்–13, வார்டு–174ல் மசூதி காலனி 6வது தெருவில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக் கூடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 07.03.2013 அன்று தீர்மான எண்.07/2013–ன்படி நிலைக்குழு (கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.103/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.2.ந.க.எண்.இ1/586/2013</u>**

**<u>முதன்மை செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.158/2013 பொருள் எண்:08

**<u>மண்டலம் – 2, பகுதி –5, வார்டு – 21ல் நெடுஞ்செழியன் சாலையில் உள்ள மணலி பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் சென்று வர இடையூறாக உள்ள வணிக கடைகளை இடித்து அப்புறப்படுத்த அனுமதி</u>**

மண்டலம் –2 (மணலி) பகுதி–5, வார்டு–21ல் நெடுஞ்செழியன் சாலையில் உள்ள மணலி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் சென்று வர இடையூறாக நடுவில் 12 வணிக கடைகள் உள்ளன. இந்த கடைகள் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னதாக 1992ம் ஆண்டு மணலி பேரூராட்சியால் கட்டப்பட்டது. இந்த கடைகளால் மணலி பேருந்து நிலையத்திற்கு மாநகர பேருந்துகள் வந்து செல்வதற்கு இடையூறாக உள்ளதால் கடைகளை இடித்து பேருந்துகள் எளிதாக சென்று வர வார்டுகுழு–2ன் தீர்மானஎண்.25 நாள்.13.02.2013ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பழுதடைந்துள்ள இந்த கடைகளின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.31,590/– மற்றும் கடைகளின் பரப்பளவு 112 ச.மீ. ஆகும்.

எனவே, மண்டலம்–2 (மணலி) பகுதி–5, வார்டு–21ல் நெடுஞ்செழியன் சாலையில் உள்ள மணலி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் சென்று வர இடையூறாக உள்ள வணிக கடைகளை இடிக்க நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.105/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/684/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.**159/2013** பொருள் எண்:**09**

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை எண்:**38**, நிதித்(PGC) துறை, நாள்:**11.02.2013**, ஓய்வூதிய பங்களிப்பு திட்டத்திற்கான வட்டி விகிதம் **01.04.2003** முதல் **30.11.2011** வரை **8** சதவீதமாகவும், **01.12.2011** முதல் **8.6** சதவீதமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசு ஆணையின் விவரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**(Abstract)**

## FINANCE (PGC) DEPARTMENT
## G.O.No.38, Dated: 11th February, 2013

Pension- Contributory Pension Scheme- Employees contribution and Government contribution- Enhancement of rate of interest at the rate of 8.6% - Orders - Issued.

---

**Read**:-

1. G.O.Ms.No.222, Finance (Pension) Department, dated.3.6.2008.
2. G.O.Ms.No.106, Finance (Allowances) Department, dated 30.3.2012.
3. From the Principal Accountant General, Chennai-18 letter No.GPF-14/CPS/SO/382- 119134, dated 24.8.12 and 27.12.2012.
4. Government letter No.49690/PGC/2012, dated 2.1.2013.

*********

**ORDER:**

1. In the reference first cited the rate of interest for Contributory Pension Scheme has been fixed at the rate of 8% with effect from 1.4.2003.

2. In the reference second cited the rate of interest for General Provident Fund and other Provident Funds including Contributory Provident Fund has been enhanced at the rate of 8.6% with effect from 1.12.2011.

3. Accordingly, the Government have decided to enhance the rate of interest for Contributory Pension Scheme also and order that the rate of interest for Contributory Pension Scheme is fixed at the rate of 8% upto 30.11.2011 and at the rate of 8.6% with effect from 1.12.2011.

4. The above rate of interest will remain the same until further orders are issued in this regard.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. KRISHNAN,**
**Secretary to Government (Expenditure)**

To
All Secretaries to Government.
All Departments of Secretariat.
The Legislative Assembly Secretariat, Chennai - 600 009.
The Governor's Secretariat, Raj Bhavan, Chennai - 600 022.
The Tamil Nadu Information Commission, No.2, Thiyagaraya Salai, Eldams Road Junction, Teynampet, Chennai - 600 018.
All Heads of Departments.
The Accountant General (A&E), Chennai - 600 018. (By name)
The Accountant General (A&E), Chennai - 600 018.
The Principal Accountant General (Audit-I), Chennai - 600 018.
The Accountant General (Audit-II), Chennai - 600 018.
The Accountant General (CAB), Chennai - 600 009.
The Registrar, High Court, Chennai - 600 104.

The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai - 600 003.
The Commissioner, Corporation of Chennai / Madurai / Coimbatore / Tiruchirappalli / Salem / Tirunelveli / Erode / Tiruppur / Vellore / Thoothukudi.
All District Collectors / District Judges / Chief Judicial Magistrates.
All Regional Joint Directors of Treasuries and Accounts Department.
The Pension Pay Officer, Chennai - 600 006.
All Treasury Officers / Sub-Treasury Officers.
All State Government owned Boards / Corporations.

**Copy to:**

The Finance (OP.I/OP.II/OP.III/OP.M/BG.II/Bud.Misc. / Public / Pay Cell), Chennai - 600 009.
The Secretary to Chief Minister, Chennai - 600 009.
The Director of Pension, D.M.S. Complex, Chennai - 600 006.
The Commissioner of Treasuries and Accounts, Chennai - 600 015.
The Director of Local Fund Audit, Chennai - 600 108.
Stock File / Spare Copies.

**-// Forwarded / By Order //-**

**SECTION OFFICER**

எனவே, அரசாணை எண்.**38**, நிதித்(PGC)துறை, நாள் **11.02.2013**னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**102/2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.1.ந.க.எண்.பி1/01348–1/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 06.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.160/2013 பொருள் எண்:10

**மண்டலம்–1 (திருவொற்றியூர்) துப்புரவு பணி மேற்கொள்ளுதல் – பகுதி–1ல் கோட்டம்–1 முதல் கோட்டம் 4 வரை தேவைப்படும் பணியாளர்கள் தனியார் ஏஜென்சி மூலம் நியமிக்க அனுமதி.**

மண்டலம்–1ல் 1 முதல் 14 வரையில் 14 வார்டுகளில் 1338 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) உள்ளது, இப்பகுதிகளில் 289187 மக்கள் சுமார் 70300 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தூய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம்–1 (திருவொற்றியூர்)ல் வார்டு –1 முதல் 14 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் வார்டு 1 மற்றும் 2ல் ஏற்கனவே கத்திவாக்கம் நகராட்சியின் நிர்வாகத்தின் கீழ் இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தம் வருகிற 31.03.2012 அன்றுடன் முடிவடைகிறது. வார்டு 3 முதல் 9 வரை உள்ள வார்டுகளில் தற்போது தனியார் ஏஜென்சி மூலம் வழங்கும் 60 துப்புரவு தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.243/– என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தமும் 03.03.2013வுடன் முடிவடைகிறது. அதனை தொடர்ந்து இந்த நான்கு கோட்டங்களிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் அதன் விவரம் பின் வருமாறு

**மண்டலம்–1 , பகுதி–1, கோட்டம் 1 முதல் 4 வரை**

| வ எண். | வார்டு எண் | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | குறைவு |
| 1 | 1 | 105 | 31 | – | 31 | 74 |
| 2 | 2 | 90 | 28 | – | 28 | 62 |
| 3 | 3 | 101 | 29 | – | 29 | 72 |
| 4 | 4 | 91 | 30 | – | 30 | 61 |
| மொத்தம் | | 387 | 118 | | 118 | 269 |

1. ஒப்பந்த அடிப்படையில் 01.04.2013 முதல் ஒரு வருட காலத்திற்கு மண்டலம்–1, பகுதி–1, கோட்டம்–1 முதல் கோட்டம்–4 வரை 269 நபர்களுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்த நிர்வாக அனுமதியும்
2. தூய்மை பணிக்கு தனியார் பணியாளர்களைக் கொண்டு பணி செய்ய திடக்கழிவு மேலாண்மைத் துறை குறிப்பின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 295/– வீதம் (269 x 365 x 295 ) ரூ. 2,89,64,575/– (ரூபாய் இரண்டு கோடியே என்பத்தி ஒன்பது இலட்சத்தி அறுபத்தி நான்காயிரத்து ஐந்நூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) செலவு செய்ய அனுமதியும்
3. துப்புரவுத் துறையின் தலைப்பு எண்.40–41–03 கணக்கு குறியீடு எண்.230–20–19–00 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்
4. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.96/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.105/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1.ந.க.எண்.பி1/01348–2/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 6–3–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.161/2013 பொருள் எண்:11

**மண்டலம்–1(திருவொற்றியூர்) துப்புரவு பணி மேற்கொள்ளுதல்– பகுதி–2ல் கோட்டம்–5 முதல் கோட்டம் 9 வரை தேவைப்படும் பணியாளர்கள் தனியார் ஏஜென்சி மூலம் நியமிக்க அனுமதி.**

மண்டலம்–1ல் 1 முதல் 14 வரையில் 14 வார்டுகளில் 1338 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) உள்ளது, இப்பகுதிகளில் 289187 மக்கள் சுமார் 70300 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் தூய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம்–1 (திருவொற்றியூர்)ல் வார்டு –1 முதல் 14 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு 3 முதல் 9 வரை உள்ள வார்டுகளில் தற்போது தனியார் ஏஜென்சி மூலம் வழங்கும் 60 துப்புரவு தினக்கூலி பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.243/– என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்தமும் 03.03.2013வுடன் முடிவடைகிறது. அதனை தொடர்ந்து இந்த ஐந்து கோட்டங்களிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் அதன் விவரம் பின் வருமாறு

**மண்டலம்–1 பகுதி–2, கோட்டம் 5 முதல் 9 வரை**

| வ எண். | வார்டு எண் | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | குறைவு |
| 1 | 5 | 124 | 30 | – | 30 | 94 |
| 2 | 6 | 116 | 43 | – | 43 | 73 |
| 3 | 7 | 89 | 15 | – | 15 | 74 |
| 4 | 8 | 81 | 30 | – | 30 | 51 |
| 5 | 9 | 87 | 30 | – | 30 | 57 |
| மொத்தம் | | 497 | 148 | | 148 | 349 |

எனவே,

1. ஒப்பந்த அடிப்படையில் 01.04.2013 முதல் ஒரு வருட காலத்திற்கு மண்டலம்–1, பகுதி–2, கோட்டம்–5 முதல் கோட்டம்–9 வரை 349 நபர்களுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்த நிர்வாக அனுமதியும்,
2. தூய்மை பணிக்கு தனியார் பணியாளர்களைக் கொண்டு பணி செய்ய திடக்கழிவு மேலாண்மைத் துறை குறிப்பின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 295/– வீதம் ( 349 x 365 x 295 ) ரூ. 3,75,78,575/– (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தி ஐந்து இலட்சத்தி எழுபத்தி எட்டாயிரத்து ஐந்நூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) செலவு செய்ய அனுமதியும்,
3. துப்புரவுத் துறையின் தலைப்பு எண்.40–41–03 கணக்கு குறியீடு எண்.230–20–19–00 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,
4. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.97/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.106/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

<u>**ம.அ.1.ந.க.எண்.பி1/01348–3/2013**</u>

<u>**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 2.3.2013 நாளிட்ட குறிப்பு**</u>

தீர்மான எண்.162/2013 பொருள் எண்:12

<u>**மண்டலம்–1(திருவொற்றியூர்) துப்புரவு பணி மேற்கொள்ளுதல் – பகுதி–3ல் கோட்டம்–10 முதல் கோட்டம்–14 வரை தேவைப்படும் பணியாளர்கள் தனியார் ஏஜென்சி மூலம் நியமிக்க அனுமதி.**</u>

மண்டலம்–1ல் 1 முதல் 14 வரையில் 14 வார்டுகளில் 1338 உட்புற சாலைகளும், 11 பேருந்து சாலைகளும் (நெடுஞ்சாலை உட்பட) உள்ளது, இப்பகுதிகளில் 289187 மக்கள் சுமார் 70300 குடியிருப்புகளில் வசிக்கின்றனர். இப்பகுதிகளில் துாய்மை பணிகள் தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றில் இரவு நேர துாய்மை பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது.

மண்டலம்–1 (திருவொற்றியூர்)ல் வார்டு–1 முதல் 14 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோட்டம்–10 முதல் கோட்டம்–14 வரையுள்ள வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்த ஒப்பந்தம் வருகிற 2013ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது. அதைத் தொடர்ந்து இந்த ஐந்து வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் அளிக்கும் தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

**மண்டலம்–1 பகுதி–3, கோட்டம் 10 முதல் 14 வரை**

| வ எண். | வார்டு எண் | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | குறைவு |
| 1 | 10 | 65 | – | – | – | 65 |
| 2 | 11 | 81 | – | – | – | 81 |
| 3 | 12 | 70 | – | – | – | 70 |
| 4 | 13 | 71 | – | – | – | 71 |
| 5 | 14 | 83 | – | – | – | 83 |
| மொத்தம் | | 370 | – | – | – | 370 |

எனவே,

1. ஒப்பந்த அடிப்படையில் 01.05.2013 முதல் ஒரு வருட காலத்திற்கு மண்டலம்–1, பகுதி–3, கோட்டம் –10 முதல் கோட்டம் –14 வரை 370 நபர்களுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்த நிர்வாக அனுமதியும்,
2. துாய்மை பணிக்கு தனியார் பணியாளர்களைக் கொண்டு பணி செய்ய திடக்கழிவு மேலாண்மைத் துறை குறிப்பின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 295/– வீதம் ( 370 x 365 x 295 ) ரூ.3,98,39,750/– (ரூபாய் மூன்று கோடியே தொன்னுாற்றி எட்டு இலட்சத்தி முப்பத்தி ஒன்பது ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்) செலவு செய்ய அனுமதியும்,
3. துப்புரவுத் துறையின் தலைப்பு எண்.40–41–03 கணக்கு குறியீடு எண்.230–20–19–00 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,
4. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.98/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.107/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

<u>ம.அ.2.ந.க.எண்.இ1/561/2013</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 02.03.2013 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.163/2013 பொருள் எண்:13

<u>துப்புரவு பணியாளர்களை நியமிக்க தனியார் நிறுவனம் மூலம் ஒப்பம் கோர அனுமதி</u>

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 45.33 சதுர கி.மீ பரப்பளவுள்ள 7வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 25 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 609 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,31,868 இருப்பினும் நகரமயாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மண்டலம் – 2 (மணலி) பகுதிகளில் 85.12 மெ.டன் குப்பைகள் தினமும் சேகரிக்கப்படுகிறது.

தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, தேவைகளை கண்டறிய நடைபெற்ற ஆய்வு கூட்டத்தின்படி படிவம் 1, 2, 3ல் குறிப்பிட்டுள்ளவாறு

1) மறு ஆய்வின்படி மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை – 629
2) தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை – 42
3) மறு ஆய்வின் படி தேவைப்படும் பணியாளர்கள் – 587

எனவே இக்கருத்துகளின் அடிப்படையில் 629 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 42 துப்புரவு பணியாளர்களை தவிர்த்து 587 துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியினை மேற்கொள்ள தனியார் நிறுவனம் மூலம் நிரப்ப வேண்டி உள்ளது.

| வ எண் | மறு ஆய்வின்படி மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை | மறு ஆய்வின் படி தேவைப்படும் பணியாளர்கள் | தேவைப்படும் தோராய செலவினம் (வருடத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 629 | 42 | 587 | 6,32,05,225/- |

இதனை தொடர்ந்து தெரிவிப்பது எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் மக்கள் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன்பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–2ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்தஅங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ,295/– வீதம் 587 பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.295 x 587 x 365 என ஓர் ஆண்டிற்கு ரூ.6,32,05,225/– தொகை தேவைப்படுகிறது.

எனவே 587 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்களை நியமிக்க தனியார் நிறுவனம் மூலம் ஒப்பம் கோர வேண்டி உள்ளது. இதற்கு கீழ்கண்ட விவரங்களுக்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனம் மூலம் தேவையான பணியாளர்கள் 587 எண்ணிக்கை அளவில் தினக்கூலி அடிப்படையில் பகுதி 4 மற்றும் 5ற்கு 587 எண்ணிக்கை பணியாளர்கள் ஒப்பம் கோரி பணியமர்த்தவும்,
2. தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் என்ற அடிப்படையில் ஒப்பங்கள் கோரவும், அதற்கான தேவையான தோராய செலவினம் ரூ.6,32,05,225/–க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண் 40–41–03 கணக்கு தலைப்பு எண் 230–15–01–00 மேற்கொள்ளவும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.95/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.104/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.6.ந.க.எண்.இ1/479/2013**

**முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின் 06.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.164/2013 பொருள் எண்:14

**மண்டலம்–6, பகுதி–15,16, 17 வார்டு–64 முதல் 78 வரை – திருவாளர்கள் நெல்லை மோட்டார்ஸ், ஒப்பந்த காலம் நிறைவடையவுள்ளதால் – சுகாதார சீர்கேடு மற்றும் பொது மக்களின் தொடர்ச்சியான புகார்கள் – தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் தொழிலாளர்கள் அமர்த்தி துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதி.**

மண்டலம்–6, பகுதி–15,16,17 வார்டு–64 முதல் 78 வரை 15 வார்டுகளில் ஆட்கள் பற்றாக்குறையுடன் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு தினசரி வார விடுமுறை, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டா விடுப்பு, முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமை மற்றும் நீண்ட காலமாக பணிக்கு வராமை போன்ற காரணங்களினால் தினசரி ஏற்படும் காலி இடங்களுக்கு தற்காலிக தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறை காரணத்தினால் குப்பைகளை உடனுக்குடன் அகற்ற இயலாத நிலை ஏற்பட்டு இருந்ததாலும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடும் மற்றும் தொடர்ச்சியான புகார்கள் வந்த வண்ணம் இருந்ததாலும், ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி மூலம் 120 தனியார் தினக்கூலி துப்புரவு பணியாளர்களை ஒப்பம் கோரப்பட்டு திருவாளர்கள் நெல்லை மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு 5 மாதங்களுக்கு பணி ஆணை கடந்த 07.09.2012 அன்று வழங்கப்பட்டது. இப்பணி காலம் வரும் 5.2.2013 அன்று முடிவடைகிறது. இந்நிலையில் பணியின் அவசியம் கருதி இக்கோப்பு ஒப்புதல் பெற்று ஒப்பம் முடிவு செய்ய காலதாமதம் ஆகும் என்பதால் மேற்படி பணிகளை செய்து வரும் திருவாளர்கள் நெல்லை மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு காலம் மற்றும் பணி நீட்டிப்பு ஆணை வழங்க முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களுக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் திரு. டி. குமார் அவர்களுக்கு 154 பணியாளர்களை தினக்கூலி சம்பளம் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது. இந்த 154 பணியாளர்கள் பகுதி–15,16 மற்றும் 17ல் பணிபுரிந்து வருகிறார்கள். எதிர்வரும் காலம் பொது சுகாதார சீர்கெடாத வகையில் முழுமையாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் மண்டலம்–6ல் உள்ள 15 வார்டுகளுக்கு சுமார் 185 பணியாளர்களை ஒப்பந்த முறையில் துப்புரவு பணியாளர்களை பணி அமர்வு செய்ய ஒப்பம் கோரப்பட வேண்டும். இதன் பொருட்டு, தற்பொழுது பணிபுரியும் பணியாளர்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | மொத்தம் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | மீதம் தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 64 | 187 | 185 | 2 |
| 2 | 65 | 149 | 133 | 16 |
| 3 | 66 | 169 | 137 | 32 |
| 4 | 67 | 88 | 85 | 3 |
| 5 | 68 | 107 | 98 | 9 |
| 6 | 69 | 117 | 108 | 9 |
| 7 | 70 | 117 | 71 + 46 = 117 | –– |
| 8 | 71 | 68 | 56 | 12 |
| 9 | 72 | 130 | 46+61 =107 | 23 |
| 10 | 73 | 106 | 59+47=106 | –– |
| 11 | 74 & ODG | 137 | 137 | –– |
| 12 | 75 | 48 | 45 | 3 |
| 13 | 76 | 86 | 76 | 10 |
| 14 | 77 | 115 | 78 | 37 |
| 15 | 78 | 102 | 99 | 3 |
| 16 | S.H | 59 | 33 | 26 |
| **மொத்தம்** | | **1785** | **1600** | **185** |

எனவே, மேற்குறிப்பிட்ட துப்புரவு பணியாளர்களை தருவிக்க, வார்டு–64 முதல் 78 வரை 185 பணியாளர்களுக்கு, ஒரு துப்புரவு பணியாளர்களுக்கு தற்போதைய அலுவலக அங்கீகரிக்கப்பட்ட விலை, நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் 365 நாட்களுக்கு (12 மாதங்களுக்கு) ஆகும் தொகை ரூ.1,99,19,875/– ஆகும்.

மேலும் இப்பணிக்கு திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் நிரந்தர துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தும் வரை இப்பணிக்கு மண்டலம் மூலம் ஒப்பம் கோரி பணியமர்வு செய்யலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்–6ல் உள்ள 15 வார்டுகளில் எதிர்வரும் காலம் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள, வார்டு–64 முதல் 78 மற்றும் ஆட்டு இறைச்சி கூடத்திற்கும் சேர்த்து 185 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் 365 நாட்களுக்கு (12 மாதங்களுக்கு) ஆகும் தொகை ரூ.1,99,19,875/–க்கு நிர்வாக அனுமதியும்,
2) பணியின் அவசர மற்றும் அவசிய தன்மையை கருதியும் நிர்வாக அனுமதியினை எதிர் நோக்கியும் இப்பணியை தனியார் நிறுவனங்கள் மூலம் ஆட்கள் அமர்த்த ஒப்பம் கோர அனுமதி வேண்டியும்,
3) மேற்கண்ட பணிக்கான ரூ.1,99,19,875/– செலவினத்தை கணக்கு தலைப்பு தனியார்மயம் துப்புரவு (Privatation of Conservancy) வரவு செலவு திட்ட மதிப்பீடு 2013–14ஆம் நிதியாண்டில் பிரிவு எண்.40–41–03, கணக்கு தலைப்பு எண்.230–15–01–00 தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீட்டை நிதி ஆலோசகர் மூலம் பெறவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.99/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.108/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.12.ந.க.எண்.இ1/000351/2013**
**ஆணையர் அவர்களின் 15.02.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.165/2013 பொருள் எண்:15

**மண்டலம்–12ல் துப்புரவு பணி – பற்றாக்குறை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.**

மண்டலம்–12ல் தற்போது 1574 உட்புறச்சாலைகளும், 39 பேருந்து சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினை சார்ந்த சாலைகளை சுமார் 226.54 கி.மீ. நீளத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் பிரதான பேருந்து சாலைகள், அங்காடி அமைந்துள்ள சாலைகள் போன்றவற்றை இரவு நேர துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அதன் அடிப்படையில் கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களின் விவரப்பட்டியல் வட்டார இணை ஆணையர் (தெற்கு) அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை அறிக்கையின்படி கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண். | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | குறைவு |
| 1 | 156 | 140 | 50 | 30 | 80 | 60 |
| 2 | 157 | 110 | 37 | 18 | 55 | 55 |
| 3 | 158 | 92 | 39 | 25 | 64 | 28 |
| 4 | 159 | 40 | 22 | 0 | 22 | 18 |
| 5 | 160 | 85 | 63 | 0 | 63 | 22 |
| 6 | 161 | 90 | 60 | 0 | 60 | 30 |
| 7 | 162 | 90 | 72 | 0 | 72 | 18 |
| 8 | 163 | 73 | 55 | 0 | 55 | 18 |
| 9 | 164 | 78 | 70 | 0 | 70 | 8 |
| 10 | 165 | 94 | 74 | 0 | 74 | 20 |
| 11 | 166 | 94 | 59 | 0 | 59 | 35 |
| 12 | 167 | 135 | 94 | 0 | 94 | 41 |
| 13 | ஜி.எஸ்.டி. சாலை | 49 | 20 | 0 | 20 | 29 |
| மொத்தம் | | 1170 | 715 | 73 | 788 | 382 |

அதன்படி தற்போது உள்ள மாநகராட்சி பணியாளர்கள் 788 நபர்களை தவிர ஒப்பந்த அடிப்படையில் மொத்தம் 382 நபர்கள் தேவைப்படுகின்றனர். அதற்கு கீழ்கண்டவாறு செலவுத் தொகை 2012–2013 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை துறை பரிந்துரை செய்துள்ள விலைப்படி கணக்கிடப்பட்டுள்ளது.

1) மொத்த பணியாளர்கள் = 400
2) தினசரி ஊதியம் / நபர் ஒருவருக்கு = 295
3) மொத்த பணி நாட்கள் = 365
4) மொத்த செலவினம் = 400 x 295 x 365 = ரூ.4,30,70,000/–

எனவே,

1. மண்டலம் 12ல் அமைந்துள்ள வார்டுகளான 156 முதல் 167 வரை 12 வார்டுகளில் பணிபுரிய 400 தற்காலிக துப்புரவு பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் 365 நாட்களுக்கு பணி அமர்த்தவும்,
2. இதற்காகும் செலவு தொகையான ரூ.4,30,70,000/– (ரூபாய் நான்கு கோடியே முப்பது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) பிரிவு குறியீடு 40–41–03, கணக்கு குறியீடு 230–15–01–00 தனியார்மயம் துப்புரவு என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,
3. இப்பணியின் அவசியம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.100/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.109/2013, –ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.14.ந.க.எண்.அ7/1536/2013**

**முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின் 06.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.166/2013 பொருள் எண்:16

**மண்டலம்–14 (பெருங்குடி) – துப்புரவு பணி – தனியார் நிறுவனங்கள் மூலம் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர் நியமனம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட புதியதாக உருவாக்கப்பட்ட மண்டலம்–14 (பெருங்குடி) பகுதி கொட்டிவாக்கம், பாலவாக்கம், மடிப்பாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், பள்ளிக்கரணை, பெருங்குடி ஆகிய பேரூராட்சி மற்றும் உள்ளகரம், புழுதிவாக்கம் நகராட்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இணைக்கப்பட்ட மண்டலமாகும். புதியதாக உருவாக்கப்பட்ட இம்மண்டலம் 11 வார்டுகளை கொண்டுள்ளது. 86,359 வீடுகளுடன் கூடிய 3,45,435 எண்ணிக்கைகள் மக்கள் தொகை கொண்ட பெரிய மண்டலமாகும். இம்மண்டலத்தில் உள்ள 2489 சாலைகள் 394.28 கிலோமீட்டர் நீளம் கொண்டதாகும்.

மண்டலம்–14ல் உருவாகும் குப்பைகள் 20 எண்ணிக்கை கொண்ட கம்பாக்டர் வண்டிகள், 300 எண்ணிக்கை கொண்ட மூன்று சக்கரமிதிவண்டி மற்றும்
10 எண்ணிக்கையில் உள்ள பலதரப்பட்ட வண்டிகள் மூலமும் 172.71 மெட்ரிக் டன் அளவிற்கு குப்பைகள் நாள்தோறும் அகற்றப்பட்டுவருகிறது.

தோராயமாக வீதிகளை சுத்தம் செய்யவும், மூன்றுசக்கர வண்டி ஓட்டவும் கம்பாக்டர் மற்றும் லாரிகளில் குப்பைகளை ஏற்றிக்கொண்டு அப்புறப்படுத்தவும், இரவுப்பணி செய்யவும் மொத்தம் 1373 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

தற்போது மண்டலத்தில் மொத்தமுள்ள நிரந்தரம் மற்றும் சுமார் 15 வருடங்களாக பஞ்சாயத்து காலத்தில் இருந்து இன்று வரை தற்காலிகமாக பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 538 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஆகையால், மொத்தம் தேவையான பணியாளர்கள் 1353ல், பணிபுரியும் பணியாளர்கள் 538 போக மீதம் 815 பேர் தேவைப்படுகின்றனர். தற்போது ஸ்ரீ வெங்கடேஸ்வரா எஞ்சினியரிங், ஜெ.கே.ட்ரான்ஸ் மற்றும் அங்காளம்மன் எர்த் மூவர்ஸ் ஆகிய தனியார் நிறுவனங்கள் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள 351 பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பணியின் ஒப்பகாலம் 15.05.2013உடன் முடிவடைகிறது.

நாள் தோறும் துப்புரவு செய்ய தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கைக்கும் தற்போது பணியில் உள்ளவர்கள் எண்ணிக்கைக்கும் அதிக அளவு வித்தியாசம் உள்ளதால் தினசரி குப்பைகளை அப்புறப்படுத்தி தூய்மை படுத்தும் பணியில் தொய்வு ஏற்பட்டு பொதுமக்கள் மத்தியிலும் மற்றும் செய்தித்தாள்களிலும் விமர்சிக்கப்படுகிறது.

முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்கள் அனைத்து மண்டல அலுவலர்களுக்கும், தேவையான துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் தற்காலிகமாக ஓராண்டுக்கு நியமனம் செய்துகொள்ள 09.02.2013 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

மேற்பார்வை பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மைதுறை) அவர்களின் சுற்றறிக்கை தி.க.மே.ந.க.எண்.அ7/497/13, நாள் 12.02.2013ன்படி உறுதி செய்யப்பட்ட ஒரு துப்புரவு தொழிலாளியின் தினக்கூலி ரூ.295/– என்ற அடிப்படையில் மண்டலம்–14க்கு தேவைப்படும் 815 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஆண்டுக்கு (ரூ.295X815 X 365)=ரூ.8,77,55,125/– (ரூபாய் எட்டு கோடியே எழுபத்திஏழு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நூற்றுஇருபத்தைந்து ரூபாய்) தேவைப்படுகிறது.

தகுதியுடைய தனியார் நிறுவனம் மூலம் மண்டலம்–14ல் உள்ள 11 வார்டுகளுக்கும் 815 துப்புரவு பணியாளர்களை ரூ.295/– தினக்கூலி அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு (365 நாட்கள்) ஒளிவுமறைவற்ற ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்யவும்.

1. மண்டலம்–14ல் குப்பைகள் அகற்றும்பணி சிறப்பாக செயல்பட தேவைப்படும் 815 தினக்கூலி தப்புரவு பணியாளர்களில் தற்போது தனியார்மூலம் பணிபுரியும் 351 துப்புரவு பணியாளர்கள் போக (815–351) மீதி 464 தினக்கூலி துப்புரவு பணியாளர்களை இந்த ஒப்பம் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட நாளிலிருந்து மே 15ந்தேதி 2013 வரை இந்த ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்யப்பட இருக்கும் தனியார் நிறுவனம் மூலம் நியமனம் செய்துகொள்ளவும், அதன்பிறகு (மே 16, 2013 முதல்) மொத்த எண்ணிக்கையான 815 பணியாளர்களை நியமித்துக்கொள்ளவும்,
2. இதற்கு தேவையான தோராய செலவினம் ரூ.8,77,55,125/– (ரூபாய் எட்டு கோடியே எழுபத்திஏழு லட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து நூற்றுஇருபத்தைந்து ரூபாய்)க்கு கணக்கு குறியீட்டு எண். 40–41–03, கணக்கு தலைப்பு எண்.230–15–01–00ல் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. துப்புரவு பணியாளர்கள் ஒரு நாளைக்கு ரூ295/– என்ற அடிப்படையில் நியமனம் செய்வதற்கும் மற்றும் ஒப்பங்கள் கோருவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது

"11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 07.03.2013 அன்று தீர்மான எண்.102/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.111/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

<u>ம.அ.15.ந.க.எண்.பி1/ 0003 /2013</u>

<u>முதன்மைச் செயலர்/ஆணையாளர் அவர்களின் 15.02.2013 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.167/2013 பொருள் எண்:17

**<u>மண்டலம்–15 – பகுதி–44 மற்றும் 45 – வார்டுகள் 192 முதல் 200 வரை – துப்புரவு பணி – தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் – விவரம் சமர்ப்பித்தல் –கூடுதல் பணியாளர்களுக்கு பின்னேற்பு அனுமதி.</u>**

மண்டலம்–15, சோழுங்கநல்லூர் பகுதியானது 42.23சதுரகி.மீ. பரப்பளவுள்ள 9 வார்டுகளை உள்ளடக்கி 283கி.மீ. நீளமுள்ள 1767 சாலைகள் அமைந்துள்ள பகுதியாகும். சுமார் 3.03 இலட்சம் மக்கள் தொகை உள்ள இம்மண்டலத்தில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 180 MT என்று கணக்கிடப்பட்டுள்ளது. மண்டலம்–15 என்பது சோழுங்கநல்லூர் பேரூராட்சி மற்றும் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், காரப்பாக்கம், உத்தண்டி மற்றும் செம்மஞ்சேரி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளைக் கொண்டது.

துரைப்பாக்கத்தில் அமைந்துள்ள கண்ணகி நகர் மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளில் துப்புரவு பணிகள் தமிழ்நாடு குடிசை பகுதி வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பகுதிகள் நீங்கலாக, ஏனைய பகுதிகளில் சென்னை மாநகராட்சி துப்புரவு பணி மேற்கொள்ள உத்தேசித்து, அதன்படி தற்போது பணிபுரிபவர்கள் தவிர்த்து துப்புரவு பணியாளர்கள் படிப்படியாக தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்தப்பட்டு துப்புரவு பணி செவ்வனே நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்தால் கண்ணகிநகர் மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த துப்புரவு பணி சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம்மண்டலத்தில் துப்புரவுப்பணியினை முழுமையாக மேற்கொள்ள 977 பணியாளர்கள் தேவை என்றும் கீழே பட்டியலிடப்பட்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது மண்டலம்–15, பகுதி–44 மற்றும் 45க்கு உட்பட்ட வார்டுகளான 192 முதல் 200 வரை தேவையான பணியாளர்கள், தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் குறைவான பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | குறைவு |
| 1 | 192 | 114 | 8 | 31 | 39 | 75 |
| 2 | 193 | 88 | 11 | 15 | 26 | 62 |
| 3 | 194 | 90 | 13 | 19 | 32 | 58 |
| 4 | 195 | 121 | 18 | 17 | 35 | 86 |
| 5 | 196 | 139 | 16 | 25 | 41 | 98 |
| 6 | 197 | 117 | 26 | 16 | 42 | 25 |
| 7 | 198 | 152 | 25 | 6 | 31 | 121 |
| 8 | 199 | 61 | 8 | 7 | 15 | 46 |
| 9 | 200 | 65 | 13 | 12 | 25 | 70 |
| மொத்தம் | | 977 | 138 | 148 | 286 | 691 (700) |

இந்நிலையில் துப்புரவுப்பணிகளை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் ஆர்வம் காட்டும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. அதுவரை கிழக்கு கடற்கரை சாலை போன்று முக்கிய பிரதானசாலை அமைந்துள்ள இப்பகுதியின் துப்புரவுப்பணிகளை செம்மையாக மேற்கொள்ள தற்போதுள்ள 286 பணியாளர்கள் போதுமானதாக இல்லை.

தற்போதைய நிலையில் போதுமான வாகனங்கள் மற்றும் காம்பாக்டர் பின்கள் ஆகியவை இல்லாத காரணத்தினாலும் கண்ணகி நகர் மற்றும் செம்மஞ்சேரி தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியம் சென்னை மாநகராட்சியிடம் சேர்க்கப்பட்டதாலும் துப்புரவுப்பணியினை தீவிரப்படுத்தி மேலும் செம்மையாக்க பணியாளர்களை ஒப்பந்தாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு ஒப்பங்கள் கோரி ஒப்பந்தாரர் மூலம் 700 பணியாளர்களை 12 மாத காலத்திற்கு தினசரி ரூ.295/– வீதம் சம்பளம் வழங்க ஆகும் செலவு கீழே கணக்கிடப்பட்டுள்ளது.

1. மொத்த பணியாளர்கள் – 700
2. தினசரி ஊதியம் / நபர் – ரூ. 295 /–
3. மொத்த பணி நாட்கள் – 365 நாட்கள்
4. மொத்த செலவினம் – 700 x 295 x 365= ரூ.7,53,72,500/–

எனவே,

1. மண்டலம்–15 பகுதி–44 மற்றும் 45 அமைந்துள்ள வார்டுகளான 192 முதல் 200 வரை ஆகியவற்றில் கூடுதலாக பணிபுரிய 700 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் 365 நாட்களுக்கு பணியமர்த்தவும்,
2. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இதற்காகும் செலவுத் தொகையான ரூ.7,53,72,500/– (ரூபாய் ஏழுகோடியே ஐம்பத்தி மூன்று லட்சத்து ஏழுபத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) பிரிவு குறியீடு 40–41–03 கணக்கு குறியீடு 230–15–01–00 தனியார்மயம் துப்புரவு என்ற தலைப்பில் பட்டியை தீர்வுசெய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.101/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.110/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.2.ந.க.எண். எச்.1/0565/2012</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.168/2013 பொருள் எண்:18

**<u>மண்டலம் 2 (மணலி) –தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்த அடிப்டையில் 72 மலேரியா சுகாதார பணியாளர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் எடுத்துக் கொள்ள அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம் 2 (மணலி) மொத்தம் 7 வார்டுகள் உள்ளன. மலேரியா பணிக்காக நீர் தேக்கங்களில் மருந்து தெளிக்கவும், புகை மருந்து அடிக்கவும், நீர் வழிகளில் தடுப்புகளை அகற்றி சுத்தம் செய்யவும் மற்றும் கொசு தடுப்பு பணிபுரிய 72 மலேரியா சுகாதாரப்பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். அதன் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| தேவைப்படும் பணியாளர்கள் | நாளொன்றுக்கு ஊதியம் | வேலை செய்யும் நாட்கள் | வருடத்திற்கு தோராய செலவீனம் |
|---|---|---|---|
| 72 | 289 | 365 | ரூ.75,94,920/– |

மேற்கண்ட 72 பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் ஒரு வருடத்திற்கு பணியில் அமர்த்திக் கொள்ள மேற்காணும் தொகை ரூ.75,94,920/– (ரூபாய் எழுபத்து ஐந்து இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) ஒப்பம் கோரப்பட்டது.

1. மண்டலம் 2ல் கொசு தடுப்பு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்க களப்பணிகளை மேற்கொள்ள தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 72 பணியாளர்களை 12 மாதத்திற்கு பணியில் அமர்த்திக் கொள்ளவும்,
2. 72 பணியார்களை ஒப்பந்த முறையில் பணியில் அமர்த்த ஒப்பந்தம் கோரவும்,
3. தேர்வு செய்யப்படும் ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பந்த தொகைக்கேற்ப 2 சதவீதம் தொகையினை பிணை வைப்பு தொகையாக பெற்று ஒப்பந்தம் செய்து கொள்ளவும்,
4. இச்செலவினத்தை மண்டலம் 2 க்கு அனுமதிக்கப்பட்ட பிரிவு குறியீடு எண்.30–32–02 கணக்கு குறியீடு எண்.210–10–06–02 செலவிடவும்.

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.22/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.114/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.3/ம.சு.அ/ந.க.எண்./ 902 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.169/2013 பொருள் எண்:19

**மண்டலம்–3 பொதுசுகாதார துறையில் மேல்நிலைத்தொட்டிகளில் மருந்து இடும்பணி, கால்வாய்களில் ஆகாய தாமரை செடிகளை அகற்றி மற்றும் பக்க கால்வாய்களில் அடைப்பினை நீக்கி கைத்தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மற்றும் புகைத்தெளிப்பான் மூலம் புகை பரப்பும் பணி ஆகியவற்றினை கோட்டம் 22 முதல் 33வரை மேற்கொள்ள 178 ஆண் பணியாளர்களை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திகொள்ள அனுமதி.**

சென்னை மாநகராட்சி மண்டலம்–3 (மாதவரம்) 40.551 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 12 கோட்டங்கள் (கோட்டம் 22 முதல் 33வரை) உள்ளடங்கியதாகும். இக்கோட்டங்களில் மொத்த மக்கள் தொகை 1,96,027 மற்றும் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 49,007 ஆகும். இந்த மண்டலத்தில் 56.731 கிலோ மீட்டர் நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும், 8.5 (இருபக்கமும் சேர்த்து மொத்தம் 17 கிமீ) கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களும் உள்ளது. மேலும் 49,007 வீடுகளிலும் உள்ள மேல் நிலை தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், மற்றும் கிணறுகளில் மருந்து இடும் பணி (ALO) செய்ய வேண்டி உள்ளது.

இம்மண்டலத்தில் தொற்று நோய் பரவலை தடுக்கும் பொருட்டும், கொசு உற்பத்தியை தடுக்கவும், மேல்நிலைத்தொட்டிகளில் மருந்து இடும்பணி, கால்வாய்களில் ஆகாய தாமரை செடிகளை அகற்றி மற்றும் பக்க கால்வாய்களில் அடைப்பினை நீக்கி கைத்தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மற்றும் புகைத்தெளிப்பான் மூலம் புகை பரப்பும் பணி ஆகியவற்றினை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

இப்பணிகளை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் உத்திரவின் படி மண்டலம் 3ல் பொது சுகாதார பிரிவில் 100 ஒப்பந்த பணியாளர்களுக்கு 6மாத காலத்திற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு 09.10.12ல் ஆணையாளர்அவர்களின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 30.10.12 முதல் பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஒப்பந்தத்தின் காலம் 180 நாட்கள் அதாவது 27.04.2013 உடன் முடிவடைகின்றது. மேலும் மண்டலம் 3ல் 8 மலேரியா நிரந்தர பணியாளர்களும் உள்ளனர்.

ஆட்கள் தேவை குறித்து ஆய்வின்படி இப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள நபர் ஒருவருக்கு 70 வீடுகள் வீதம் 117 பணியாளர்கள் கொண்டு ஒருவார காலத்திற்குள் கொசுப்புழு தடுப்பு பணிகளுக்கும் (ALO Work), 17 பணியாளர்கள் கால்வாய் பணிக்கும், 12 பணியாளர்கள் பக்கவாட்டு கால்வாய் பணிகளுக்கும், 24 பணியாளர்கள் கைமூலம் புகைபரப்பும் பணிக்கும், வாகனம் மூலம் புகை பரப்பும் பணிக்கு 2 பணியாளர்களும், புகார்களுக்கு கோட்டத்திற்கு ஒருவர் வீதம் 12 கோட்டத்திற்கு 12 பணியாளர்களும், நோய் தடுப்பு பணிகளுக்குக்கென 2 பணியாளர்களும், ஆக மொத்தம் 186 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்சமயம் பணிபுரியும் 8 நிரந்தர பணியாளர்கள் தவிர்த்து கூடுதலாக 178 ஆண் பணியாளர்களை கொசு ஒழிப்பு பணிக்காக தேவைப்படுகின்றனர்.

எனவே,

1. ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு மண்டலம்–3, கோட்டம் –22முதல் கோட்டம் –33 வரை 178 மலேரியா பணியாளர்களை தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தம் பெற்று பணியாளர்களை பணியமர்த்த அனுமதியும்,
2. மலேரியா பணிக்கு தனியார் பணியார்களைக் கொண்டு பணி செய்ய திடக்கழிவு மேலாண்மைத் துறை குறிப்பின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 289/– வீதம் ( 178 x 289 x 365 ) ரூ.1,87,76,330 /– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி ஏழு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து முன்னூற்றி முப்பது மட்டும் ) செலவு செய்ய அனுமதியும்,
3. சுகாதார துறையின் தலைப்பு எண். 30–32–07 கணக்கு குறியீடு எண். 210–10–06–02 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்
4. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தம் கோரியதற்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.23/2013, –ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.115/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.12.ந.க.எண்.58/பொ.சு.து/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.170/2013 பொருள் எண்:20

**சென்னை மாநகராட்சி – மண்டலம்–12 – பொது சுகாதாரத் துறை – கோட்டம் 156 முதல் 167 வரை உள்ள 12 கோட்டங்களில் மலேரியா தொடர்புடைய பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலமாக – தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்த பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டு இணைக்கப்பட்ட மண்டலம்–12ல் மொத்தம் 12 கோட்டங்கள் உள்ளது. இப்பகுதியில் கொசுஒழிப்பு மற்றும் தொற்று நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள, கீழ்கண்ட காரணிகளை கணக்கிட்டதில் மொத்தம் 250 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இப்பணியாளர்களுக்கு சுழற்சி முறையில் விடுப்பு வழங்கும் போதும், அவர்கள் பணிக்கு வராமலிருக்கும் போதும், பணிகள் தொய்வடையாமலிருக்க 20 சதவித பணியாளர்களை கூடுதலாக (அதாவது 50 பணியாளர்கள்) தேவைப்படுகிறார்கள். ஆக மொத்தம் 300 பணியாளர்கள் தேவைபடுகிறார்கள். இதில் நிரந்தர ஊழியர்கள் மற்றும் நகராட்சி/பஞ்சாயத்து ஊழியர்களை கழித்து மீதம் 280 பணியாளர்கள் தேவைபடுகிறார்கள். இதன் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| கோட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | மழைநீர் வடிகால்வாய் (நீளம்) கி.மீ | நீண்ட கால்வாய் (நீளம்) கி.மீ |
|---|---|---|---|
| 156 | 8125 | 6.38 | 4 |
| 157 | 11121 | 2.93 | 4 |
| 158 | 4100 | 5.09 | 3 |
| 159 | 1100 | 1.14 | – |
| 160 | 4305 | 4.38 | – |
| 161 | 4750 | 4.29 | – |
| 162 | 5000 | 7.96 | 1 |
| 163 | 4250 | 9.35 | – |
| 164 | 5500 | 5.79 | – |
| 165 | 5579 | 9.51 | 4 |
| 166 | 6250 | 12.91 | – |
| 167 | 6053 | 12.99 | – |
| மொத்தம் | 66133 | 82.72 | 16 |

அ. மொத்த குடியிருப்புகள் = 66133
ஒரு நாளில் கொசு ஒழிப்பு பணி செய்யப்பட
வேண்டிய வீடுகள் = 66133 / 6 = 11022
ஒரு நாளில் ஒரு பணியாளர் 60 வீடுகள் வீதம்
பணிசெய்ய தேவையான பணியாளர்கள் =11022/60= 184

ஆ. மழைநீர் வடிகால்வாய் / திறந்தவெளி கால்வாயின் நீளம் = 82.72 கி.மீ
ஒரு நாளில் மருந்து தெளிக்க வேண்டிய நீளம் = 82.72 /6 = 13.8 கி.மீ
ஒரு நாளில் ஒரு பணியாளர் ஒரு கி.மீ வீதம் மருந்து
தெளிக்க தேவைப்படும் பணியாளர்கள் = 14

இ. ஆகமொத்தம் தேவைப்படும் பணியாளர்கள் அ + ஆ = 184 + 14 = 198
கால்வாய் பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் = 28
புகைப்பரப்பும் பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் = 24
(12 புகை பரப்பும் கருவி x 2 நபர்கள் வீதம்)

ஈ. கூடுதலாக தேவைப்படும் 20 சதவித பணியாளர்கள் = 50
(பணிக்கு வராதவர்களுக்கு பதிலி பணியாளர்கள்)

-------------

ஆகமொத்தம் = 300

-------------

தேவைபடும் மொத்த பணியாளர்கள் 300ல் நிரந்தர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் 20 நபர்கள்கழித்தது போக தேவைபடும் பணியாளர்கள் = 280

280 பேருக்கு ரூ.235 என்ற அலுவலக விலைப்பட்டி ஒரு வருட காலத்திற்கு ரூ. 1,78,41,200/—(ஒரு கோடியே எழுபத்தி எட்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து இருநூறு மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதற்கிடையில் அலுவலக அடிப்படை விலைவிகிதம் ரூ.235 லிருந்து ரூ.289 ஆக உயர்த்தப்பட்டது.

இதன் அடிப்படையில் மேற்கண்டவாறு 280 பணியாளர்களுக்கு ஒரு பணியாளர்க்கு அலுவலக நிர்ணய ஊதியமாக நாளொன்றுக்கு ரூ. 289 /— வீதம் 1 நாளுக்கு 280 பணியாளர்களுக்கு ஆகும் மொத்த செலவு (1 X 289X 280) ரூ. 80, 920 / — 21 மார்ச் 2013 முதல் 31 மார்ச் 2014 முடிய 376 நாட்களுக்கு தேவைப்படும் தொகை ரூ. 3,04,25, 920/— என்று கணக்கிடப்படுகிறது.

தற்போது ஒப்பந்தகாரர்கள் மூலம் இப்பணிக்கு பணியாளர்களை நியமித்திட ஒப்பம் கோரப்பட்டதில் ''சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ்'' என்ற ஒப்பந்ததாரர் மூன்று மாத காலத்திற்கு ஒரு பணியாளர்க்கு ரூ.320/— என்ற வீதம் ஒப்பந்தம் எடுத்து பணியினை செய்து வருகிறார். இவர்களது ஒப்பந்த காலம் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் 2 மாதங்கள் (அ) 3 மாதங்கள் குறுகிய காலத்திற்கு ஒப்பந்தங்கள் கோரப்படுவதால் பணியாளர்கள் கிடைப்பது அரிதாக உள்ளதென்றும், ஊதியமும் குறைவாக இருப்பதாகவும் இதனால் மலேரியா பணிக்கு தேவைப்படும் மொத்த பணியாளர்களையும் வழங்க முடியவில்லை என ஒப்பந்ததாரர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில் மண்டலம் 12ல் பொது சுகாதாரத் துறையில் தற்போது பணியாளர்களை தரும் ''சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸஸ்'' என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் மார்ச் 20 உடன் முடிவடைந்த பிறகு மொத்த 280 பணியாளர்களையும் பணியமர்திடவும், அவர்களது பணியானது முழுமையாக தொய்வின்றி நடைபெற 21 மார்ச் 2013 முதல் 31 மார்ச் 2014 முடிய நிபந்தனைகளை பின்பற்றி ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பங்கள் கோரலாம்.

எனவே,

1. மண்டலம் 12ல் பொது சுகாதாரத்துறையில் பணிகள் தொய்வின்றி நடைபெற தேவைபடும் பற்றாக்குறை பணியாளர்களான சுமார் 280 பணியாளர்களை, இதில் அனுபவம் பெற்ற ஒப்பந்தாரர்களின் மூலம் பணியாற்ற ஒப்பந்தங்கள் கோரவும்.
2. 31 மார்ச் 2014 வரையிலான செலவுத் தொகையான ரூ.3,04,25,920/—ஐ (மூன்று கோடியே நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) (30—32—02/210—10—06—05) என்ற கணக்குத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும்,
3. இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி குறைந்த கால ஒப்பங்கள் கோரப்பட்டதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''11.03.2013 அன்று 2013—2014ஆம் ஆண்டிற்கான வரவு—செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.20/2013, —ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''11.03.2013 அன்று 2013—2014ஆம் ஆண்டிற்கான வரவு—செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.113/2013—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

<u>ம.அ.14.ந.க.எண்/1626/2012</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.02.2013 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.171/2013 பொருள் எண்:21

**<u>சென்னை மாநகராட்சி மண்டலம்–14 பொது சுகாதாரத்துறை கோட்டம்–168, 169, 183 முதல் 191 வரை உள்ள 11 கோட்டங்களில் மலேரியா தொடர்புடைய பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலமாக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டு இணைக்கப்பட்ட மண்டலம்–14ல் மொத்தம் 11 கோட்டங்கள் உள்ளது. இப்பகுதியில் கொசுஒழிப்பு மற்றும் தொற்று நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மேலும் சுகாதாரத்துறை சார்ந்த பணிகளை மேற்கொள்ள மலேரியா பணியாளர் எவரும் இல்லாத சூழ்நிலையை கருத்தில் கொண்டு கீழ்கண்ட காரணிகளை கணக்கிட்டதில் மொத்தம் 288 பணியாளர்கள் தேவைப்படுகிறது. இப்பணியாளர்களுக்கு சுழற்சி முறையில் விடுப்பு வழங்கும்போதும், அவர்கள் பணிக்கு வராமலிருக்கும்போதும், பணிகள் தொய்வடையாமலிருக்க 20 சதவித பணியாளர்களை கூடுதலாக (அதாவது 58 பணியாளர்கள்) தேவைப்படுகிறார்கள். ஆக மொத்தம் 346 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதில் நிரந்தர ஊழியர்கள் மற்றும் நகராட்சி/பஞ்சாயத்து ஊழியர்களை கழித்து மீதம் 329 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இதன் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| கோட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | மழைநீர் வடிகால்வாய் (நீளம்) கி.மீ | நீண்ட கால்வாய் (நீளம்) கி.மீ |
|---|---|---|---|
| 168 | 8600 | 17. 93 | – |
| 169 | 11800 | 22.3 | – |
| 183 | 15000 | 18.0 | 2 |
| 184 | 5000 | 10.9 | – |
| 185 | 5600 | 23.3 | 2 |
| 186 | 4000 | 14.1 | – |
| 187 | 9200 | – | – |
| 188 | 11350 | 1.4 | 1 |
| 189 | 7000 | 1.5 | – |
| 190 | 7000 | 7.4 | – |
| 191 | 7400 | 9.34 | – |
| மொத்தம் | 91950 | 126.17 | 5 |

அ. மொத்த குடியிருப்புகள் = 91950

ஒரு நாளில் கொசு ஒழிப்பு பணி செய்யப்பட வேண்டிய வீடுகள் = 91950 / 6 = 15325

ஒரு நாளில் ஒரு பணியாளர் 60 வீடுகள் வீதம் பணிசெய்ய தேவையான பணியாளர்கள் =15325/60= 255

ஆ. மழைநீர் வடிகால்வாய் / திறந்தவெளி கால்வாயின் நீளம் = 126.17 கி.மீ

ஒரு நாளில் மருந்து தெளிக்க வேண்டிய நீளம் = 126 /6 = 21 கி.மீ

ஒரு நாளில் ஒரு பணியாளர் ஒரு கி.மீ வீதம் மருந்து தெளிக்க தேவைப்படும் பணியாளர்கள் = 21

இ. ஆகமொத்தம் தேவைப்படும் பணியாளர்கள் அ + ஆ = 255 + 21 = 276

கால்வாய் பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் = 6

புகைப்பரப்பும் பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் = 6

ஈ. கூடுதலாக தேவைப்படும் 20 சதவித பணியாளர்கள் = 58

————————————

ஆகமொத்தம் = 346

————————————

தேவைப்படும் மொத்த பணியாளர்கள் 346ல் நிரந்தர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் 17 நபர்கள்கழித்தது போக தேவைபடும் பணியாளர்கள் = 329

மேற்கண்டவாறு **329** பணியாளர்களுக்கு ஒரு பணியாளர்க்கு அலுவலக நிர்ணய ஊதியமாக நாளொன்றுக்கு தோராயமாக ரூ. **289/–** வீதம் **1** மாதத்திற்கு ரூ.**329** பணியாளர்களுக்கு ஆகும் மொத்த செலவு தோராயமாக ( 30 X 289X 329 ) ரூ.**28,52,430 / –** ஒரு வருட காலத்திற்கு தேவைப்படும் தொகை ரூ. **3,42,29,160/–** ஆகும்.

தற்போது ஒப்பந்தகாரர்கள் மூலம் இப்பணிக்கு பணியாளர்களை நியமித்திட ஒப்பம் கோரப்பட்டதில் ''சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸஸ்'' என்ற ஒப்பந்ததாரர் மூன்று மாத காலத்திற்கு ஒரு பணியாளர்க்கு ரூ.**295/–** என்ற வீதம் ஒப்பந்தம் எடுத்து பணியினை செய்து வருகிறார். இவர்களது ஒப்பந்த காலம் மார்ச் மாதம் **9**ம் தேதியுடன் முடிவடைகிறது. இவர்களால் மலேரியா பணிக்குத் தேவைப்படும் மொத்த **329** பணியாளர்களை வழங்க முடியவில்லை. காரணம் கேட்டதில் **2** மாதங்கள் (அ) **3** மாதங்கள் ஒப்பந்தங்கள் கோருகின்ற போது பணியாளர்கள் கிடைப்பது அரிதாக உள்ளதென்றும், ஊதியமும் குறைவாக இருப்பதாகவும் கூறினார்.

இது தொடர்பாக மற்ற மண்டலங்களில் விசாரித்ததிலும் குறுகிய காலத்திற்கு பணியாளர்களை அமர்த்திட மாநகராட்சி மூலம் ஒப்பம் கோருவதால் அதில் கலந்து கொள்ள எவருக்கும் விருப்பம் இல்லை எனவும், இதனை நீண்ட நாட்களுக்கு அதாவது குறைந்தபட்சம் **6** மாதத்திற்கோ அல்லது ஒரு வருடத்திற்கோ ஒப்பம் கோருகின்றபொழுது பல்வேறு ஒப்பந்ததாரர்கள், நிறுவனத்தினர் பணியாட்களை வழங்க முன்வருவதற்க்கு வாய்ப்புள்ளதாக கருத்து தெரிவிக்கின்றனர்.

மேலும் வட்டார இணை ஆணையர்(தெற்கு) அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் ஒப்பந்தங்கள் கோருகின்றபொழுது கீழ்கண்டுள்ள கருத்துகளை வைத்து செயல்படுமாறு கருத்து தெரிவித்துள்ளார்.

**"It should be long term. That is one year subject to the contingency of C.O.C entering into a large scale operation plan (or) any other such situation wherein the decision making authority decides to curtail the duration with a 15 days Notice. Six month duration is assured.**

**Bidding factor is to be on a monthly basis in the form of a consolidated payment."**

மேலே சொல்லப்பட்ட காரணங்களின் அடிப்படையில் மண்டலம் **14**ல் பொது சுகாதாரத் துறையில் தற்போது பணியாளர்களை தரும் ''சீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸஸ்'' என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் மார்ச் **9** உடன் முடிவடைந்த பிறகு மொத்த **329** பணியாளர்களையும் பணியமர்த்திடவும், அவர்களது பணியானது முழுமையாக தொய்வின்றி நடைபெற ஒரு வருடத்திற்கு நிபந்தனைகளை பின்பற்றி ஒப்பந்ததாரர்கள் ஒப்பங்கள் கோரலாம்.

எனவே,

1. மண்டலம்–**14**ல் பொது சுகாதாரத்துறையில் பணிகள் தொய்வின்றி நடைபெற தேவைப்படும் பற்றாக்குறை பணியாளர்களான சுமார் **329** பணியாளர்களை, இதில் அனுபவம் பெற்ற ஒப்பந்தாரர்களின் மூலம் பணியாற்ற ஒப்பந்தங்கள் கோரியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. ஒரு வருட காலத்திற்கான செலவுத் தொகையான ரூ.**3,42,29,160 /–**ஐ **(30–32–02/210–10–06–02)** என்ற கணக்குத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

''**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**20/2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**103/2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.5.ந.க.எண்.இ2/7891/2012</u>**

**<u>முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.02.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.172/2013 பொருள் எண்:22

**<u>மண்டலம் – 5 – ‘‘சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்’’ (Chennai Mega City Develoment Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ள அனுமதி.</u>**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ‘‘சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்’’ என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012 – 2013 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் **இராயபுரம் மண்டலத்தில் (மண்டலம் – 5) 22.796 கி.மீ. நீளமுள்ள 103 சாலைகளில் 18.33 கோடி மதிப்பீட்டில்** மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் பணிகளும் இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு இரண்டு உறை முறையில் (Two Cover) தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

<u>சிப்பம் 2 – 59 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் **மண்டலம் 5ல் உள்ள 59 சாலைகளை** ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.950.00 இலட்சங்கள்.

ஒப்பந்த அறிவிப்பு 04.01.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாள்.03.01.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 21.01.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்– 2</u>**

1. **திரு. கே. சுப்பிரமணி.**
2. **திருவாளர்கள். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்.**

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் –2ல் கலந்து கொண்ட **திரு. கே. சுப்பிரமணி மற்றும் திருவாளர்கள். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன், ஆகிய ஒப்பந்ததாரர்கள்** சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களாக நிர்ணயிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 24.01.2013 அன்று திறக்கப்பட்டது.

**<u>சிப்பம் 2</u>**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக பணியின் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | **திரு. கே. சுப்பிரமணி** | 9,49,86,345.25 | 10,32.32.419.26 | (+) 8.68 அதிகம் |
| 2 | **திருவாளர்கள். பாபுஜி சிவில் கன்ஸ்ட்ரக்ஷன்.** | 9,49,86,345.25 | 11,34.42.454.68 | (+)16.27 அதிகம் |

சிப்பம்–2 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் **திரு. கே. சுப்பிரமணி,** அவர்களிடம் இரண்டு முறை விலைக்குறைப்பு கோரப்பட்டது. **திரு. கே. சுப்பிரமணி,** அவர்கள் இறுதியாக 12.02.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையில் விலைகுறைப்பு செய்ய முன்வந்து **திரு. கே. சுப்பிரமணி,** அவர்களின் கோரப்பட்ட ரூ.10,32,32,419.93 ஒப்பத்தொகையில் இறுதியாக ரூ.53,96,005.90ஐ குறைக்கப்பட்டு ஒப்பந்ததாரரின் இறுதியாக ஒப்பத்தொகை ரூ.9,78,36,414.03 ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 3.00 விழுக்காடு அதிகமாகும். (02.02.2013 நாளன்று சந்தை விலை ரூ.9,97,07,779.29 உடன் ஒப்பிடுகையில் ஒப்பத்தொகையைவிட (–)1.87 விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர்–5 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான **திரு. கே. சுப்பிரமணி,** அவர்களின் இறுதியாக ஒப்பத்தொகை ரூ.9,78,36,414.03 ஆகும். பணி முடிக்கும் காலம் 6 மாதங்கள் ஆகும். மதிப்பீட்டு தொகையை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளதாலும்,
2. இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ள நிலையிலும் ஒப்ப விலை 2012–2013ஆம் ஆண்டின் மதிப்பீட்டு தொகையைவிட குறைவாக இருப்பதாலும்,
3. இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)3.00 விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)1.87 விழுக்காடு குறைவாக உள்ளன. இப்பணிக்கு இரண்டாவது முறையாக (2nd Call) ஒப்பம் கோரப்பட்டுள்ளது. இப்பணியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியும் உள்ளது. மேலும் இப்பணிக்கு ஒப்பத்தை ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஒப்பம் கோரப்பட்டால் இந்த ஒப்ப விலை புள்ளியை விட அதிகமாக ஒப்ப விலைப் புள்ளி அளிக்க வாய்ப்பு உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–2க்கு குறைந்த ஒப்பத்தாதாரரான **திரு. கே. சுப்பிரமணி,** அவர்கள் அளித்துள்ள இறுதியாக ஒப்பத்தொகையான ரூ.9,78,36,414.03க்கு பணியினை வழங்க உயர்மட்ட ஒப்பகுழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை **திரு. கே. சுப்பிரமணி,** அவர்களுக்கு 2012–2013ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 3.00 அதிகமாகும் இறுதியாக ஒப்பத்தொகை ரூ.9,78,36,414.03க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.104/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.112/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.2.ந.க.எண்.இ1/2858/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.173/2013 பொருள் எண்:23

**மண்டலம் – 2 – ''சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்'' (Chennai Mega City Develoment Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது –சிப்பம் – 1, 3 சாலைகள் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.கே.சுப்ரமணி,அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ''சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012–13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது..

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மணலி மண்டலத்தில், (மண்டலம்-2) 2.505 கி.மீ. நீளமுள்ள 3 சாலைகளில் ரூ. 9.73 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. சிப்பம் ஒன்று பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள்அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

<u>சிப்பம் 1 –ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் –2ல் உள்ள 3 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.973.00 இலட்சங்கள்.

ஒப்பந்த அறிவிப்பு 06.02.2013 நமது எம்.ஜி.ஆர். மற்றும் 07.02.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. மற்றும் தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. முன் கலந்தாய்வு ஒப்பக்கூட்டம் 13.02.2013 அன்று நடத்தப்பட்டது.

ஒப்ப நாளான 22.02.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு

**<u>சிப்பம்–1</u>**

1.திரு.கே.சுப்ரமணி

2.திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம்–1ல் கலந்து கொண்ட அவர்கள் திரு.கே.சுப்ரமணி, திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 25.02.2013 அன்று திறக்கப்பட்டது.

**<u>சிப்பம் 1</u>**

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ. | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு | பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்ப சதவிகிதம் மற்றும் ஒப்பபத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.கே.சுப்ரமணி | 97169035.33 | 102606842.00 | (+)5.60 | (–)0.01 % 97162461.85 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 97169035.33 | 108469946.05 | (+)11.63 | – |

சிப்பம்–1ல் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பம் பெறப்பட்டது. திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அலுவலக விலைப்பட்டியலின் படி ரூ.97169035.33லிருந்து அதிகமாக (+)11.63அதிகம் அளித்துள்ளார். எனவே, குறைந்த விலைப்புள்ளிகள் அளித்த தி.கே.சுப்ரமணி அவர்களிடம், அவர் அளித்துள்ள தொகை 102606842.00 (+) 5.60% அதிகம் என்பதால் விலைகுறைப்பு செய்ய நடந்த பேச்சு வார்த்தைக்குப்பின் அலுவலக மதிப்பீட்டை விட (–) 0.01ரூ விழுக்காடு குறைத்து 5.03.2013 அன்று நாளிட்ட கடிதத்தில் அளித்துள்ளார். இத்தொகை சந்தைவிலையுடன் ஒப்பிடுகையில் (–) 13.55ரூ விழுக்காடுகள் குறைவு ஆகும்

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர்–2 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு.கே.சுப்ரமணி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.97162461.85 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2. இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சேவைத் துறையினரின் வடங்கள் கொண்டு செல்ல (Duct) அமைப்புகள் ஏற்கனவே வார்ப்பிக்கப்பட்ட Precast முறைப்படி கட்டப்படவுள்ளதாலும் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3. இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 0.01% விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 13.55% விழுக்காடு குறைவாகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர் கே.சுப்ரமணி அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டைவிட (–)0.01% குறைவான ஒப்பத்தொகை ரூ.9,71,62,461.85க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.108/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.118/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.எண்.பி5/3709/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.174/2013 பொருள் எண்:24

**பேருந்து சாலைகள் துறை – ஒப்பம் – 2012–13 – மண்டலம்–4, 6, 8, 9 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகள் / தெருக்களின் போக்குவரத்து பாதையில் மெல்லிய ஒயிட் டாப்பிங் தொழில்நுட்பத்தை (Thin White Topping) பயன்படுத்தி கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி – சிப்பம்–4 (69 சாலைப்பணிகள்) – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

சென்னை மாநகரில் முதன் முறையாக மண்டலம்–4, 6, 8, 9 மற்றும் 13ல் உள்ள பல்வேறு சாலைகள் / தெருக்களின் போக்குவரத்து பாதையில் மெல்லிய ஒயிட் டாப்பிங் தொழில்நுட்பத்தை (Thin White Topping) பயன்படுத்தி 69 உட்புறச் சாலைகள் கான்கிரீட் சாலைகளாக அமைப்பதற்கு ரூ.16.11 கோடி மதிப்பிட்டிலான பணிகளுக்கு சிப்பம்–4 ஒப்பங்கள் கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| சிப்பம் எண். | மண்டலம் | பணிகள் விவரம் | சாலைகளின் எண்ணிக்கை | பணியின் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 4, 6, 8, 9 மற்றும் 13 | போக்குவரத்து பாதையில் மெல்லிய ஒயிட் டாப்பிங் தொழில்நுட்பத்தை (Thin White Topping) பயன்படுத்தி கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணி | 69 | 1611.00 |

ஒப்பந்த அறிவிப்பு 02.11.2012 அன்று ஆங்கில நாளிதழ் – இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ் நாளிதழ் – தினமணி மற்றும் 08.11.2012 அன்று மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் 01.11.2012 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது மற்றும் தகவல் தொழில்நுட்ப முறையில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது.

ஒப்ப நாளான 05.12.2012 அன்று கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து சிப்பம்–4க்கான ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

**சிப்பம்–4:**

(1) திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட்
(2) திருவாளர்கள். லாண்ட்மார்க் கர்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட்

தொழில்நுட்ப ஒப்பம் மதிப்பாய்வு செய்யப்பட்டதில், கலந்து கொண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தகுதி பெற்றனர். அதன்படி தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 17.12.2012 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி விவரம் கீழ்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள்/திரு | அலுவலக மதிப்பீட்டுத்தொகை 2012-2013 ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத் தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | என்.ஏ.பி.சி லிமிடெட் | 161049900.62 | 177676246.24 | (+)10.32% அதிகம் |
| 2 | லாண்ட்மார்க் கர்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் | 161049900.62 | 206706325.80 | (+)28.35% அதிகம் |

சிப்பம்–4க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.என்.ஏ.பி.சி லிமிடெட் ஆவார். அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகை ரூ.17,76,76,246.24 ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2012–2013 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட (+)10.32% அதிகம் ஆகும்.

குறைந்த ஒப்பந்ததாரருடன் உடனடியாக விலைக்குறைப்பு கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்பத்தொகையான ரூ.17,76,76,246.24 லிருந்து ரூ.17,12,79,901.38க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்கள். அதன்படி திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்கள் அளித்த இறுதி ஒப்பத் தொகையான ரூ.17,12,79,901.38 ஆனது 2012–2013ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 6.35% அதிகமாகும். 08.12.2012 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (–)1.76% குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மேற்பார்வை பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இப்பணியானது சென்சார் சிலிப் பார்ம் பேவர் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த தொழில்நுட்பம் சென்னை மாநகரத்தில் முதன் முறையாக செயல்படுத்தப்படவுள்ளது. இத்தொழில்நுட்பம் இப்பணியின் சிறப்பம்சம் ஆகும்.
2. இவ்வொப்பந்தப்புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.17,12,79,901.38 ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகையானது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.

3. இப்பணி மேற்கொள்ள மூலப் பொருள்களான ஜல்லி, மணல், சிமெண்ட் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகியுள்ளதாலும் ஒப்ப விலை அலுவலக விலையைவிட அதிகமாக உள்ளது.
4. இவ்வொப்பத் தொகையானது **2012–13**ம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையை விட (+) 6.35% அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 1.76% குறைவாகும்.

மேற்கூறப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்களுக்கு **2012–13**ம் ஆண்டு விலைவிவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டைவிட (+) 6.35% அதிகமான ஒப்பத்தொகை ரூ.**17,12,79,901.38**க்கு பணியியை வழங்க ஒப்பக்குழுமத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பக்குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

மிக அதிக மழையின் காரணமாக பல்வேறு பேருந்து சாலைகள் மிக அதிகளவு பழுதடைந்துள்ளதால் இது பொதுமக்களுக்கு அதிக இடையூறுகளை ஏற்படுத்துவதாக உள்ளதாலும் மேலும், தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊடகங்கள் இச்சாலைகளை உடனடியாக சீர் செய்ய வலியுறுத்தி உள்ளனர். எனவே, மிகவும் அதிகமாக பழுதடைந்த இச்சாலைகள் உடனடியாக சீர் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது.

1. இப்பணியானது சென்சார் சிலிப் பார்ம் பேவர் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த தொழில்நுட்பம் சென்னை மாநகரத்தில் முதன் முறையாக செயல்படுத்தப்படவுள்ளது. இத்தொழில்நுட்பம் இப்பணியின் சிறப்பம்சம் ஆகும்.
2. இவ்வொப்பந்தப்புள்ளியானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**17,12,79,901.38** ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பத்தொகையானது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
3. இப்பணி மேற்கொள்ள மூலப் பொருள்களான ஜல்லி, மணல், சிமெண்ட் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகியுள்ளதாலும் ஒப்ப விலை அலுவலக விலையைவிட அதிகமாக உள்ளது.
4. இவ்வொப்பத் தொகையானது **2012–13**ம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டுத் தொகையை விட (+) 6.35% அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 1.76% குறைவாகும்.
5. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டுத் தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என **29.10.2007** நாளிட்ட தீர்மான எண்.**512/2007**ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மேலும், இவ்பொப்பமானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்த புள்ளி என்பதாலும், விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்கள் அளித்துள்ளது ஒப்பப்புள்ளி ரூ.**17,12,79,901.38** ஆனாது **2012–13**ம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட (+) 6.35% அதிகமாகும் மற்றும் சந்தை விலையைவிட (-) 1.76% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ள தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பம் குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–4க்கு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகையான ரூ.**17,12,79,901.38**க்கு பணியினை வழங்க ஒப்பம் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, சிப்பம்–4ற்கான ஒப்பத்தினை திருவாளர்கள். என்.ஏ.பி.சி லிமிடெட் அவர்களுக்கு **2012–13** ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)**6.35%** அதிகமான ஒப்பத்தொகை ரூ.**17,12,79,901.38**க்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி பணியை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு –செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**106/2013**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**116/2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**தி.க.மே.து.ந.க.எண்.அ4/0830/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 08.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.175/2013 பொருள் எண்:25

**திடக்கழிவு மேலாண்மைத்துறை – கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் உள்ள குப்பைகளை சமன்செய்யும் பணி –வாடகைக்கு ஹைட்ராலிக் எக்ஸவேட்டர்(பொக்லைன்) மற்றும் புல்டோசர் இயந்திரங்கள் அமர்த்துவது – வாடகை விலை ஒரு மணி நேரத்திற்கு என்ற அடிப்படையில் (Annual rate contract basis) ஓராண்டிற்கு விலை நிர்ணயம் செய்திட ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நிர்வாக அனுமதி வேண்டியும் ஓராண்டிற்கான விலை மதிப்பீட்டிற்கு அனுமதி**

தற்போது சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களில் இருந்து கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சுமார் 5000 மெட்ரிக் டன் குப்பையும், 500 மெட்ரிக் டன் கட்டிடக்கழிவுகளும் தினமும் கொட்டப்பட்டு வருகிறது. சேகரிக்கப்படும் குப்பை கழிவுகளை தினமும் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான புல்டோசர் மற்றும் பொக்லைன் இயந்திரங்களை கொண்டும் மற்றும் கூடுதலாக ஒப்பந்த அடிப்படையில் தனியாரிடமிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு சமன் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மேற்குறிப்பிட்ட பணிக்காக, நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000த்தின் பரிந்துரையின்படி கீழ்கண்டவாறு புல்டோசர் மற்றும் பொக்லைன் இயந்திரங்கள் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து குப்பை சமன் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பெறப்படும் குப்பையின் அளவு :** 2500 **மெ.டன்**

| குப்பை கொட்டும் வளாகத்திற்கு பயன்படும் இயந்திரத்தின் பெயர் | நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000 பரிந்துரைப்படி, தேவைப்படும் இயந்திரம் | தற்போது பணி அமர்த்தப்பட்ட இயந்திரம் | |
|---|---|---|---|
| | | வாடகைக்கு அமர்த்தப்பட்ட இயந்திரம் | சென்னை மாநகராட்சி இயந்திரம் |
| புல்டோசர் | 10 | 9 (பகல் 6 & இரவு 3) | –– |
| லோடர் | 6 | 1 | –– |
| எக்ஸவேட்டர் (பொக்லைன்) | 8 | 4 | 3 |

**கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பெறப்படும் குப்பையின் அளவு :**2500 **மெ.டன்**

| குப்பை கொட்டும் வளாகத்திற்கு பயன்படும் இயந்திரத்தின் பெயர் | நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000 பரிந்துரைப்படி, தேவைப்படும் இயந்திரம் | தற்போது பணி அமர்த்தப்பட்ட இயந்திரம் | |
|---|---|---|---|
| | | வாடகைக்கு அமர்த்தப்பட்ட இயந்திரம் | சென்னை மாநகராட்சி இயந்திரம் |
| புல்டோசர் | 10 | 8 | 1 |
| லோடர் | 6 | 1 | –– |
| எக்ஸவேட்டர் (பொக்லைன்) | 8 | 6 | 3 |

வாடகைக்கு அமர்த்தப்படும் இயந்திரங்களின் வாடகை மணிநேரங்கள் முடியும் ஒவ்வொரு இயந்திரங்களுக்கும் மீண்டும் ஆணையரின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணியமர்த்தப்பட்டு வருகிறது.

ஒப்பந்த காலம் முடிவடைந்த இயந்திரங்களுக்கு ஒப்புந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டி முதன்மைச்செயலர் (ம) ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்த குறிப்பில், Annual rate contract மூலம் வாடகைக்கு இயந்திரங்களை பணியமர்த்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மேற்படி பணியமர்த்தப்படும் இயந்திரங்களுக்கு ஓராண்டுக்கு ஆகும் தோராய செலவினம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| **பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம்** | | | | |
|---|---|---|---|---|
| இயந்திரம் | சராசரி பணி செய்யும் நேரம் | பணி அமர்த்தப்படும் இயந்திரம் (இரவு நேரத்திற்கு சேர்த்து) | நாள் ஒன்றுக்கு பணி செய்யும் நேரம் | ஓராண்டுக்கு பணி செய்யும் மொத்த நேரம் |
| புல்டோசர் | 9 | 9 (பகல் 6 & இரவு 3) | 81 | 29565 |
| ஏக்ஸவேட்டர் (பொக்லைன்) | 9 | 4 | 36 | 13140 |

| கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் | | | | |
|---|---|---|---|---|
| இயந்திரம் | சராசரி பணி செய்யும் நேரம் | பணி அமர்த்தப்படும் இயந்திரம் (இரவு நேரத்திற்கு சேர்த்து) | நாள் ஒன்றுக்கு பணி செய்யும் நேரம் | ஓராண்டுக்கு பணி செய்யும் மொத்த நேரம் |
| புல்டோசர் | **9** | **8** (பகல் **6** & இரவு **2**) | **72** | **26280** |
| எக்ஸவேட்டர் (பொக்லைன்) | **9** | **6** | **54** | **19710** |

**ஓராண்டிற்கான சராசரி மொத்த மதிப்பீடு**

| புல்டோசர் இயந்திரம் | | | | |
|---|---|---|---|---|
| பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு | ஓராண்டிற்கு பணி அமர்த்தப்படும் மொத்த மணி நேரம் | தொழில்நுட்ப குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட விலைவிகிதம் ஒரு மணி நேரத்திற்கு | ஓராண்டிற்கு செலவாகும் தோராய மதிப்பீடு |
| **29565** மணி நேரம் | **26280** மணி நேரம் | **55845** | ரூ.**1100/–** | ரூ.**6,14,29,500/–** |

| எக்ஸவேட்டர் (பொக்லைன்) இயந்திரம் | | | | |
|---|---|---|---|---|
| பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு | கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு | ஓராண்டிற்கு பணி அமர்த்தப்படும் மொத்த மணி நேரம் | தொழில்நுட்ப குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட விலைவிகிதம் ஒரு மணி நேரத்திற்கு | ஓராண்டிற்கு செலவாகும் தோராய மதிப்பீடு |
| **13140** மணி நேரம் | **19710** மணி நேரம் | **32850** | ரூ.**973/–** | ரூ.**3,19,63,050/–** |

கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு குப்பை சமன்செய்யும் பணிக்காக தனியாரிடமிருந்து வாடகைக்கு அமர்த்தப்படும் புல்டோசர் இயந்திரங்களுக்கு ஓராண்டுக்கு சுமார் ரூ.**6.00** கோடியும், ஹைட்ராலிக் எக்ஸவேட்டர் (பொக்லைன்) இயந்திரங்களுக்கு ஓராண்டுக்கு சுமார் ரூ.**4.00** கோடியும் **2012–2013**ஆம் நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மைத்துறை வரவு செலவு கணக்கு தலைப்பு எண்.230-80-04-00 தனியார் வாகன வாடகை கட்டணங்கள் என்ற கணக்குத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு குப்பையை சமன் செய்ய தேவைப்படும் ஹைட்ராலிக் எக்ஸவேட்டர் (பொக்லைன்) மற்றும் புல்டோசர் இயந்திரங்களின் வாடகை ஒரு மணி நேரத்திற்கு என்ற அடிப்படையில் ஓராண்டுக்கு (Annual rate contract basis) ஒப்பந்தப்புள்ளி கோரி விலை நிர்ணயம், மற்றும் ஒப்பந்ததாரரை தேர்வு செய்து கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு தேவைக்கு ஏற்றாற்போல் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்திட நிர்வாக அனுமதி வேண்டியும் ஓராண்டிற்கான தோராய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

அ) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சேர்க்கப்படும் குப்பை கழிவுகளை சமன் செய்திட தேவைப்படும் பிஇஎம்எல் டி**80** எ**12** புல்டோசர் இயந்திரங்களுக்கு வாடகை ஒரு மணி நேரத்திற்கு என்ற அடிப்படையில் ஓராண்டுக்கு (Annual rate contract basis) விலை நிர்ணயம், மற்றும் ஒப்பந்ததாரரை தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளி (Tender) கோரவும்,

ஆ) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சேர்க்கப்படும் குப்பை கழிவுகளை சமன் செய்திட தேவைப்படும் ஹைட்ராலிக் எக்ஸவேட்டர் (பொக்லைன் மாதிரி **200**) இயந்திரங்களுக்கு வாடகை ஒரு மணி நேரத்திற்கு என்ற அடிப்படையில் ஓராண்டுக்கு (Annual rate contract basis) விலை நிர்ணயம், மற்றும் ஒப்பந்ததாரரை தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளி (Tender) கோரவும்,

இ) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு சேர்த்து தேவைப்படும் பிஇஎம்எல் டி80 எ12 புல்டோசர் இயந்திரங்களுக்கு ஆகும் செலவு ஓராண்டுக்கு தோராயம் ரூ.**6.15** கோடி மதிப்பிட்டிற்கும்,

ஈ) கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு சேர்த்து தேவைப்படும் ஹைட்ராலிக் எக்ஸவேட்டர் (பொக்லைன் மாதிரி 200) இயந்திரங்களுக்கு ஆகும் செலவு ஓராண்டுக்கு தோராயம் ரூ.**3.20** கோடி மதிப்பிட்டிற்கும்,

(உ) மேற்படி வாடகைக்கு அமர்த்தப்படும் இயந்திரங்களுக்கு ஆகும் செலவினத்தை திடக்கழிவு மேலாண்மைத்துறை வரவு செலவு கணக்கு தலைப்பு எண்.230-80-04-00 தனியார் வாகன வாடகை கட்டணங்கள் என்ற கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட "அ" முதல் ''உ'' வரை உள்ள இனங்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டியும், ஓராண்டிற்கான தோராய மதிப்பீட்டிற்கும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**109/2013**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''**11.03.2013** அன்று **2013–2014**ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **09.03.2013** அன்று தீர்மான எண்.**119/2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.3.ந.க.எண்.இ1/ 394/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.03.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.176/2013 பொருள் எண்:26

**ஒப்பம் – 2012–13 – மண்டலம்–3, பகுதி–6, 7 மற்றும் 8, வார்டு–22 முதல் 33 வரை, ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பந்ததாரர் திருவாளர். ஜே. கே. டிரான்ஸ் ஒப்பத்தொகை ரூ.4,87,82,250/–க்கு பணியை வழங்க அனுமதி**

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம் 3, மாதவரம்– வார்டு–22முதல் 33 வரை துப்புரவு பணியாளர்களை கொண்டு குப்பைகளை அகற்றும் பணிக்கு தனியார் நிறுவனம் மூலம் ஒப்பம் கோரப்படுகிறது (450 ஆட்கள் மூலம் 365 நாட்கள்) |
| 2. | மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள் | முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்: 15.02.2013<br>மன்றத்தின் தீர்மான எண்:125/2013<br>நாள்: 22.02.2013 |
| 3. | திட்டக் குறியீட்டு எண். | பொருந்தாது |
| 4. | ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை | ரூ. 4,84,53,750/– |
| | அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு. | 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி |
| | அ) பணியின் செலவினம் | ரூ. 4,84,53,750.00 |
| | ஆ) மேற்பார்வை செலவினம் | ரூ. |
| | இ) சில்லரை மேற்பார்வை செலவு | ரூ. |
| | ஈ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ. |
| | உ) மின்சாராம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் | ரூ. – |
| | மொத்தம் | ரூ. 4,84,53,750/– |
| 5. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் 28/02/2013 |
| 6. | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 06/03/2013 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 08/03/2013 |
| 8. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | மன்றத்தின் தீர்மான எண்:125/2013<br>நாள்: 22.02.2013 |
| 9. | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா<br>அ)வரவு செலவு திட்டத் தலைப்பு | பராமரிப்பு நிதியின் கீழ் |
| 10. | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 05.06.2013 |

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக ஒப்பந்தகால அறிவிப்பு மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு

இ–டெண்டர் முறையில் 1 (downloaded from internet) ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது.

ஒப்ப நாளான 08/03/2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள்திறக்கப்பட்டது அதன் விவரம் கீழ் வருமாறு.

1) திருவாளர். ஜே. கே. டிரான்ஸ்

தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட ஒரு ஒப்பத்தில் திருவாளர். ஜே. கே. டிரான்ஸ் அவர்களின் ஒப்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் அணைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டதால் இந்த ஒப்பம் தகுதி வாய்ந்த ஒப்பமாகும். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் ஒப்பத்தின் நிதி ஆவணம் 08/03/2013 அன்று மாலை 5.00மணிக்கு திறக்கப்பட்டதின் அடிப்படையில் விலைப்புள்ளி ஒப்பீட்டு விபரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேறறவர் பெயர் | பணியில் அலுவலக மதிப்பு 5 (அ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2012—2013 விலை விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர். ஜே. கே. டிரான்ஸ் | ரூ. 4,84,53,750.00 | ரூ.4,89,46,500.00 | (+) 1.01 % அதிகம் |

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். ஜே. கே. டிரான்ஸ் அவர்களுடன் உடனடியாக விலை குறைப்புக்கு அழைக்கப்பட்டது. குறைந்த ஒப்பத்திற்கான திருவாளர்.ஜே.கே.டிரான்ஸ் அவர்கள் 08.03.2013 நாளிட்ட கடிதத்தில் தனது ஒப்பத் தொகை ரூ.298/—ல் இருந்து ரூ.1.00/— விலைகுறைப்பு செய்ய இசைவு தெரிவித்துள்ளார்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். ஜே. கே. டிரான்ஸ் அவர்களுக்கு 2012—2013ம் ஆண்டின் விலை விபரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)0.67% அதிகமான ஒப்பத்தொகை ரூ.4,87,82,250/—க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி பணி ஆணை வழங்க நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013—2014ஆம் ஆண்டிற்கான வரவு —செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.107/2013—ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013—2014ஆம் ஆண்டிற்கான வரவு—செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.03.2013 அன்று தீர்மான எண்.117/2013—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.6.ந.க.எண்.இ1/ 479 /22013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.03.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.177/2013 பொருள் எண்:27

**<u>ஒப்பம் – 2012–13 – மண்டலம்–6, பகுதி–15,16 மற்றும் 17, வார்டு–64 முதல் 78 வரை மற்றும் ஆட்டு இறைச்சி கூடத்திற்கு தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 185 தொழிலாளர்களை அமர்த்தி ஒரு வருடத்திற்கு பணி அளித்தல் பணிக்காக ஒப்பம் பெறப்பட்டது – திரு. கே. கந்தன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி</u>**

01. பணியின் பெயர்:–

| வ. எண் | வார்டு எண். | பணியின் விவரம் | கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின்படி பணியின் மதிப்பு ரூபாய் |
|---|---|---|---|
| 1. | 64 முதல் 78 வரை | வார்டு–64 முதல் 78 வரை மற்றும் ஆட்டு இறைச்சி கூடத்திற்கு தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 185 தொழிலாளர்கள் அமர்த்தி ஒரு வருடத்திற்கு பணி அளித்தல் | **1,99,19,875.00** |
| | | மொத்தம் | **1,99,19,875.00** |

02. மதிப்பீட்டின் எண்.குழுவின்/மன்றத்தின் தீர்மான எண்/ நாள் : முதன்மை செயலர் /ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் நாள்.28.02.2013

03. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2012 – 2013

| | | | |
|---|---|---|---|
| அ) | பணியின் செலவினம் | : ரூ. | **1,99,19,875.00** |
| ஆ) | மேற்பார்வை செலவு | : ரூ. | – |
| இ) | சிறுமேற்பார்வை செலவு | : ரூ. | – |
| ஈ) | தரக்கட்டுப்பாடு செலவு | : ரூ. | – |
| உ) | மற்றைய எதிர்பாரா செலவு | : ரூ. | – |
| | மொத்தம் | : ரூ. | **1,99,19,875.00** |

05. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் : 06.03.2013

06. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் : 08.03.2013

07. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்றவிவரம் குறிப்பிடவும். : –

08. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 05.06.2013 வரை

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை (Two Cover System) முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து ஒப்பந்த கால அறிவிப்பு மூலம் ஒப்பம் வரவேற்கப்பட்டது.

ஒப்ப நாளான 08.03.2013 அன்று இ–டெண்டர் முறையில் மூன்று ஒப்பம் பெறப்பட்டது. அவற்றின் விவரம்

1. திரு. கே. கந்தன்
2. திருவாளர்கள் நெல்லை மோட்டார்ஸ்
3. திருவாளர்கள் ஃபல்கான் (சி) செக்யூரிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்

**<u>தொழில் நுட்ப உறை</u>**

08.03.2013 அன்று மாலை 3.30 மணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பத்தில் தொழில் நுட்ப உறையின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் இம்மூன்று ஒப்பங்களும் தகுதி வாய்ந்ததாகும்.

**<u>விலை குறித்த உறை</u>**

ஒப்பந்ததாரர்கள் விலை உறை ஆவணங்கள் 08.03.2013 அன்று மாலை 5.00 மணிக்கு திறக்கப்பட்டு அவற்றின் அலகு விலை அடிப்படையில் கணக்கிடப்பட்ட மொத்த தொகையின் விவரம்.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர்கள் பெயர் (திருவாளர்கள்) | பரிந்துரைக்கப் பட்டுள்ள பணியின் மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் அளித்துள்ள விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திரு. கே. கந்தன் | 1,99,19,875.00 | 2,22,83,250.00 | (+) 11.86 % |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | திருவாளர்கள் ஃபல்கான் (சி) செக்யூரிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் | 1,99,19,875.00 | 2,42,78,613.75 | (+) 21.88 **%** |
| 3. | திருவாளர்கள் நெல்லை மோட்டார்ஸ் | 1,99,19,875.00 | 2,63,34,750.00 | (+) 32.20 **%** |

எனவே இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு அலுவலக விலைப்படி கணக்கிட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

09. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : 08.03.2013 மற்றும் 09.03.2013

10. ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் : ரூ.2,01,89,975/– (+) 1.36 % அதிகம்

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பத்தில் பேச்சு வார்த்தைபின் திரு.கே.கந்தன் அவர்கள், விலை குறைப்பு செய்து குறைந்த விலை புள்ளி அளித்துள்ளார். இந்த விலை புள்ளி 2012–13ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+) 1.36% அதிகமாகும். இதன்படி, நாள் ஒன்றிற்கு ரூ.299/– (வரிகள் உட்பட) வீதம் 185 நபர்களுக்கு, 365 நாட்களுக்கு சேர்த்து ஒப்ப தொகை ரூ.2,01,89,975/– ஆகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு. கே. கந்தன் அவர்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ.299/– (வரிகள் உட்பட) வீதம் 185 நபர்களுக்கு, 365 நாட்களுக்கு சேர்த்து ஒப்ப தொகை ரூ.2,01,89,975/– (ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து மட்டும்) 2012–2013ஆம் ஆண்டின் அலுவலக விலை விகிதப்படி ஒப்ப சதவீதம் (+) 1.36 % அதிகம் என்ற போதிலும், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி, திரு. கே. கந்தன் அவர்களுக்கு ஒப்பம் அளிக்க, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7 (I) & (II) ன்படி, மேலும், பணியின் அவசியம் கருதி ஒப்பம் அழைத்தற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 10.03.2013 அன்று தீர்மான எண்.110/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“11.03.2013 அன்று 2013–2014ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கை கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 10.03.2013 அன்று தீர்மான எண்.120/2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******